Graduate Course

PROSE

TAMZHARIN KADALVAZHI VAANIGAM

தமிழரின் கடல்வழி வாணிகம்

STUDY MATERIAL : 2

பொருளடக்கம்

பாடம்—1 : தமிழரின் கடல்வழி வாணிபம்

பாடம்—2 : தமிழரின் கடல்வழி வாணிப வரலாறு

பாடம்—3 : தமிழரும் பிறநாட்டு வணிகரும்

Editor :
Dr. S. Manickavasagam

SCHOOL OF OPEN LEARNING
University of Delhi
5, Cavalry Lane, Delhi-110007

Session 2006-07 (500 Copies)

© School of Open Learning

Published by: Executive Director, School of Open Learning, 5, Cavalry Lane, Delhi-110007
Laser Typeset at : Vadakku Vasal Publication
Printed at: Sita Fine Arts Pvt. Ltd., A-22, Naraina Industrial Area, Phase-II,
New Delhi-110028, Ph. 41418880, Email: printer@vsnl.com

பாடம்-1

தமிழரின் கடல்வழி வாணிபம்

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி" எனக் கல்லாடனார் கூறினார். அவரது வாக்கை மெய்ப்பிக்கும் வகையில் தமிழன் ஆதி மனிதனாகவும் பல சாதனைகளுக்கு முன்னோடியாகவும் இருந்துள்ளான்.

மூவாயிரம் ஆண்டுகள் கடல்வழி வணிகத்தினை நடத்தியவர்கள் தமிழர்களே. அவர்களது சாதனை உலக வரலாற்றில் மிகப் பெரிய சாதனை ஆகும். இது ஒரு அற்புதமான வரலாற்றுச் சாதனை ஆகும். உலகில் எந்த நாடும் இந்தச் சாதனையை எட்டிப் பிடித்ததில்லை.

சீனர்களின் கடல்வழி வணிகம் கி.மு.100-ல் துவங்கி கி.பி.1300இல் முடிந்தது. ரோமானியர்களும் கிரேக்கர்களும் கி.மு.100இல் தொடங்கி கி.பி.300 வரை, அதாவது 400 ஆண்டுகளே கடல்வணிகம் செய்தனர். ரோமச் சக்கரவர்த்திகளும் கிரேக்க நாட்டினரும் தமிழ்நாட்டின் பொருள்களை ஏராளமாக வாங்கியுள்ளனர். ரோமாபுரியின் செல்வச் சீமாட்டிகள் கொற்கை முத்துவையும் குரங்குகளையும் வாங்கினர். ரோம ஆட்சியாளர்கள் யானை, சிங்கம், புலி என வனவிலங்குகளையும் கொண்டு சென்றனர். இவர்கள் தங்கள் வணிகத்தைக் கிறித்துவுக்கு முன்பாகத் தொடங்கி கிறித்துவுக்கு முன்பாகவே முடித்துவிட்டார்கள்.

சுமேரியாவும் சிந்து வெளியும் சமகாலத்தில் அதாவது கி.மு.4000 ஆண்டுகளில் வணிகத்தைத் தொடங்கி கி.மு.1500 களிலேயே முடிவுற்றன. இந்தியாவை ஆண்ட மத்திய வரலாற்றுக் காலத்திய முகமதியர்களும் மொகலாயர்களும் கப்பல் தொழிலை அடியோடு புறக்கணித்தனர். வடநாட்டு ஆரியர்கள் கடல் கடப்பது மிலேச்சத்தனம் என்றும், மீறிச் சென்றவர்களைச் சாதிப் பிரஷ்டம் செய்வதுமாக இருந்தார்கள். ஆனால் தமிழ்நாட்டில் சிந்துவெளி நாகரிகத்திலேயே வெளி நாடுகளுடன் தொடர்பு உருவாகியது. அத் தொடர்பு சோழ மன்னர்களின் மகோன்னத காலமாகிய கி.பி.1300 வரை தொடர்ந்தது. அதாவது கி.மு.4000 முதல் கி.பி.1300 வரை. இதன்படி 5300 ஆண்டுகள் எனக் கணக்கு வருகிறது. இருப்பினும் பதிவு செய்யப்பட்ட வரலாறுகள் கி.மு. 1700ல் தொடங்கி கி.மு. 1300 வரையிலான 3000 ஆண்டுகளே ஆகும்.

சோழர்களின் காலத்துக்குப் பின் ஐரோப்பியர்கள் பேராசையுடன் இந்தியாவின் செல்வத்தைத் தேடிக் கப்பல்களில் துப்பாக்கியுடனும் பீரங்கிகளுடனும் கடல்களில் அலைந்தனர். போர்ச்சுக்கீசியர், பிரிட்டிஷ், டச்சுக்காரர்கள் தங்களுடைய வணிகக்

கம்பெனிகளுக்கு கிழக்கிந்தியக் கம்பெனி என்றே பெயரிட்டனர். 1492இல், காரீபியன் கடல் தீவான ஹிஸ்போனலா சென்று இறங்கி, 'நான் சைனாவிற்கு வரவில்லை, இந்தியாவிற்கு வந்துவிட்டேன்' எனக் கொலம்பஸ் கூவினான். அங்கிருந்த அரவாக் என்னும் மாயா நாகரிகத்தின் வழி வந்த மக்களைக் கண்டு அப்படிக் கூறியதுடன் அவர்களை இந்தியர்கள் என்றும் அழைத்தான்.

வாஸ்கோடகாமா என்ற போர்ச்சுக்கீசியன் ஆப்பிரிக்காவின் தென்முனையைச் சுற்றிக்கொண்டு மலபார் கள்ளிக்கோட்டைக்கு 1502-ஆம் ஆண்டு வந்தான். பின்னர் உலக சரித்திரமே மாறிப் போய்விட்டது. உலக நாடுகள் அனைத்தும் ஐரோப்பிய காட்டுமிராண்டிகளிடம் அடிமைப்பட்டுப் போயின. அத்துடன் நமது நாட்டு வாணிபமும் பட்டுப் போய்விட்டது. கடல் தாண்டிய வாணிபம் பெருஞ்செல்வத்தை ஈட்டியதும் அது தொடர்பான பல மக்கள் இங்கு வந்து வாழ்வதும், நம் மக்கள் முகம் தெரியா நாடுகளில் சென்று தங்குவதும் என வணிகமும் வாழ்வும் பின்னிப் பிணைந்த வாழ்க்கைமுறை ஆயிற்று. அதன் பயனாக பல கலாச்சாரப் பரிமாற்றங்களும் உருவாயின. அதன் எச்சங்கள் தற்போதும் அங்கங்கே இருக்கவே செய்கின்றன.

தமிழனின் கடல்வழி வாணிபம் நம் நினைவிற்கு எட்டாத காலத்திலிருந்தே நடைபெற்று வந்திருக்கிறது. கடல் சூழ்ந்த நிலப்பரப்பில் வாழ்ந்த தமிழர்கள் நெய்தல் நிலத்தவர்கள். அவர்கள் மீன் மட்டுமே பிடித்திருப்பார்கள் என எண்ணுவது இயலாது. அவர்கள் அந்தக் காலத்திலேயே நதிக்கரை நாகரிங்கள் என நான்கு இடங்களைச் சுட்டிக்காட்டப்பட்ட ஆண்டுகளுக்கு முன்பே முத்தும் பவளமும் சேகரித்திருப்பார்கள். அவற்றை அண்டை நாடுகளுக்கும் கடல் தாண்டி எடுத்துச் சென்று விற்றிருப்பார்கள்.

தமிழ்நாட்டின் தேக்கு, மேலை நாடுகளில் பரவலாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. அரசன் சாலமன் மயிலையும் தேக்கு மர ரதங்களையும் விரும்பித் தருவித்தான். தமிழ்நாட்டின் இரும்பு கிரேக்கத்திற்கு ஏற்றுமதி ஆகியுள்ளது. பட்டும் பருத்தித் துணிகளும் பெருமளவில் ஏற்றுமதி ஆயின. மிளகும் சந்தனமும் வாங்காத மேலை கீழை நாடுகளே இல்லை எனக் கூறலாம். வணிகத்துடன் நமது தமிழ்க் கலாச்சாரம் பல நாடுகளில் பரவியிருந்தது. ரோமர்களும் கிரேக்கர்களும் அரபியர்களும் சீனர்களும் இங்கு வந்து தங்கி அவர்களது வணிகத்துடன் அவர்களின் கலாச்சாரமும் பரிவர்த்தனையாக அமைந்தன.

தமிழர்களுக்கு ஈடாகவோ இணையாகவோ உலகில் எந்த நாடும் இவ்வளவு நீண்ட காலம், அதாவது 3000 ஆண்டுகளுக்கு மேலாக வணிகம் நடத்தியது இல்லை. அது தமிழர்களின் பெருமைக்குரிய வரலாறு. நேற்றைய தமிழர்கள் நிகழ்த்திக் காட்டிய சாதனையை இன்றைய தமிழகம் அறிய வேண்டியது அவசியமாகிறது.

II

தமிழகக் கடலோடிகள்

தமிழகக் கடலோடிகளின் தோற்றம்:

பல ஊழிகளுக்கு முன்பாகத் தமிழர்கள் வாழ்ந்த நிலம் ஒரு தீவாக இருந்தது. அத்தீவு இலங்கையையும் உள்ளடக்கிய பல ஆயிரம் சதுர மைல்கள் பரப்பளவுள்ள தீவு. ஊழிகளுக்குப்பின் கடல் விந்திய மலைக்கு வடக்கே இருந்தது. அதன்பின் கண்டங்கள் பிரிந்தும், இணைந்தும், இமய மலையும், கங்கை, சிந்து சமவெளிகள், விந்தியத்திலிருந்து வடக்கே உருவாயின. கன்னியாகுமரிக்குத் தெற்கேயும், கிழக்கேயும் மேற்கேயும் பெரும் நிலப்பரப்பு இருந்தது. அதனை லெமூரியாக் கண்டம், குமரிக் கண்டம் எனப் பெயரிட்டழைத்தனர். பின்னர் லெமூரியா குமரிக் கண்டம் சிதறிப் பல தீவுகளாக மாறிப்போயின. பெரும் நிலப்பரப்பு இந்தியப் பெருங்கடலில் மூழ்கியது. மூழ்கிப்போன நிலப்பரப்புகளில்தான் மனிதர்கள் முதன்முதலில் தோன்றினார்கள். அவர்கள் சிறுகச் சிறுக நாகரிக வளர்ச்சி அடைந்தார்கள். தமிழ் மொழியை உருவாக்கினார்கள். ஒரு மொழி உருவாகி, வளர்ச்சியடைந்து, இலக்கணம் படைத்துப் பின் இலக்கியங்களைப் படைத்த காலத்தில் வடகண்டமான லாரெஷ்யாவில் மனித இனம் உருவாகவில்லை.

கடல் சூழ்ந்த நிலமாகத் தமிழர்கள் வாழும் இடம் இருந்ததால், கடலின் ஆற்றலை எதிர்த்து அதனைத் தன்வயப்படுத்தி ஆளுமை புரிந்தவர்கள் தமிழர்கள். அவர்கள் கட்டுமரம், சிறுபடகு, திமில், மிதவை, கலம், மரக்கலம், நாவாய், கப்பல், பாய்மரக்கலம் என பலவகையானவற்றை அவற்றின் அளவையும், தன்மையையும் கொண்டு பெயரிட்டழைத்தனர். முதலில் மீன் பிடிக்கத் துவங்கிய அம்மக்கள் பின் பவளம், முத்து என சேகரிக்கத் துவங்கியுள்ளனர். உள் நாட்டில், சிறு ஓடங்கள், தோணிகள் கொண்டு ஆறுகளைக் கடக்கவும், ஏரிகளிலும், ஆறுகளிலும் மீன் பிடிக்கவும் செய்தார்கள். இவர்கள் செம்படவர்கள், வலைஞர் என அழைக்கப்பட்டனர்.

கடலை ஆண்ட பரதவர்:

தென்கிழக்குக் கடற்கரையில் வாழ்ந்தவர்கள் பலரும் பரவர் என அழைக்கப்பட்டார்கள். சங்கப் புலவர்கள் அவர்களை பரதவர் எனப் பாடினார்கள். வடக்கே ஆரியர்கள் அவர்களை பரத் என அழைத்தார்கள். அம்மக்களை ஆரியர்கள் தாசர்கள் என அழைத்தனர். ரிக் வேதம், திவோதஸ், சுதாஸ் ஆகிய இரு மன்னர்களையும் தாசர்கள் என்று அடையாளம் காட்டுகிறது. எனவே தாசர்களின் குலப் பெயரான பரத் என்ற பெயரால் இந்திய நாடு 'பரத கண்டே' என அழைக்கப்பட்டது. இன்றைய சுதந்திர

இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டம் அக்குலப் பெயரான பரத என்பதாகவே, இதனைப் பாரதநாடு என்று கூறி பாரத குலத்திற்கும் அவன் சார்ந்த தமிழ் இனத்திற்கும் பெருமை தேடித் தருகிறது. நெய்தல் நிலத்தில் வாழ்ந்த பரதவர்களை அகநானூற்றுப் புலவர்கள்,

"திண் திமில் எல்லுத் தொழின் மடுத்த
வில் வினைப் பரதவர்"

"வலம்புரி மூழ்கிய வான்திமிற் பரதவர்"

எனப் பெருவலைப் பரதவர், மீன் எறிப் பரதவர், வரிவலைப் பரதவர், சிறுகுடிப் பரதவர் என்றெல்லாம் குறிப்பிடுகின்றனர்.

புராணங்களில் பரதவர்:

பரதர், பரதவர் என அழைக்கப்படும் கடலோடிகள், சுதாஸ் என்ற ஒரு மீனவனின் வழிவந்தவர்கள் என்பதோடு, மச்சகந்தி என்ற ஒரு மீனவப் பெண்ணின் வம்சத்தினராகவுமே உள்ளனர். இவர்கள் ஆரியக் கலப்பற்ற இந்த மண்ணின் மைந்தர்களே என்பதை ரிக் வேதம், வரலாறுகள் ஆகியவை உறுதி செய்கின்றன.

சென்ற யுகத்தின் முடிவில் உலகம் முழுவதும் நீரால் சூழப்பட்டு மூழ்கியிருந்தபோது, தாங்கள் ஒரு தோணியினைக் கட்டிக் கொண்டு பேரழிவில் இருந்து தப்பியதாகவும், நீர் வற்றி மீண்டும் நிலம் புலப்பட்டபோது தங்களின் தோணி தரை தட்டிய இடத்தில் குடியமர்ந்ததாகவும் அதனால் அந்த இடத்திற்குத் தோணிபுரம் என்ற பெயர் உண்டானதென்றும் கூறுகின்றனர்.

இதுபோன்ற மேலும் பல செய்திகளை 'தென்னிந்தியர் குலங்களும் குடிகளும்' என்ற நூல் குறிப்பிடுகின்றது.

"ஒரு காலத்தில் பரவர் செல்வாக்கு உடையவர்களாகவும் கடற் பயணம் பற்றிய தங்களின் அறிவாற்றலின் காரணமாக மற்ற சாதியார்மீது அதிகாரம் செலுத்துபவர்களாகவும் இருந்துள்ளனர். இவர்களில் சிலர் உத்தரகோச மங்கையில் இருந்தபடி அரசு புரிந்ததாகவும் தெரிகின்றது".

"பரவனின் அரசனான திரியம்பகனும் அவன் மனைவியுமான வருணவல்லியும் மகப்பேறு வேண்டித் தவம் செய்தவர்களாக இருந்தனர். பார்வதி அவர்களுடைய மகளாக திரைசேர் மடந்தை என்ற பெயருடன் பிறந்தாள். கார்த்திகேயன் ஒரு மீனாக உருவெடுத்து

பரவர்களின் கலங்களைத் தாக்கி வந்தான். இச்சமயத்தில் சிவன் ஒரு பரவனாக வந்து அந்த மீனைப் பிடித்துத் தன் மனைவியான பார்வதியை மணந்து கொண்டான்" என்கிறது வலைவீசி கதை.

பரதவன் என்ற பெயருக்குரியவர் தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகள் பேசும் மூன்று பிரிவுகளாக உள்ளனர். இம் மூன்று பிரிவினருக்கும் தமிழ் பேசும் பரவன்களே முன்னோர்களாக உள்ளனர். இவர்களின் தலைமை இடம் தூத்துக்குடி. இவர்கள் தங்களைப் பாண்டியர்களின் பரம்பரையினர் எனக் கூறி வருகின்றனர்.

"தென்கோடியில் வாழும் மீனவர் சமயப் பற்று மிக்க கத்தோலிக்கர்களாக உள்ளனர். அதன் காரணமாக போர்ச்சுக்கீசிய கடலோடி வாஸ்கோடகாமா தனது சினம் காரணமாக அப்பாவி மீனவர்களை கூட்டுக் கொன்றதற்கு பிராயச்சித்தமாக போர்ச்சுக்கீசியர் பரவர்களுக்கு உதவ முன்வந்தனர். ஆனால் பரவர்கள் கத்தோலிக்க கிறிஸ்துவ மதத்தில் சேரவேண்டும் என நிபந்தனை விதித்தனர். இதனால் இருபதாயிரம் மீனவர் ஞானஸ்நானம் பெற்று கிறித்தவர்களாக மதம் மாறிய பின் முத்துக் குளித்தலின் உரிமையைத் திரும்பப் பெற்றனர்."

"கொற்கையில் மிகுந்த செல்வாக்குடையவர்களாக பரவர்கள் இருந்தனர் எனச் சங்க இலக்கியமான மதுரைக் காஞ்சி தெரிவிக்கின்றது. கொற்கையில் முத்துக் குளிப்பவர்களும் சங்கு அறுப்பவர்களுமே பெருமளவில் வாழ்ந்தனர் என அது தெரிவிக்கிறது. பாண்டிய அரசு வலிமை வாய்ந்ததாக இருந்த காலத்தில் பரவர் அரசிடமிருந்து பாதுகாப்பினையும் பொது வரி விதிப்பில் இருந்து விலக்கையும் பெற்று வந்தனர். இந்தச் சாதித் தலைவனின் சந்ததியினர் இன்றும் ராசா என்றே அழைக்கப்படுகின்றனர்."

தொன்மையான துறைமுகங்கள்:

மூவேந்தர்கள் ஆண்ட காலத்தில் சேரனின் துறைமுகமாக முசிரி விளங்கியது. இது பெரியாற்றின் கழிவு முகத்தில் அமையப் பெற்ற இயற்கையான துறைமுகம். கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை இத் துறைமுகம் மிகவும் சுறுசுறுப்புடன் இயங்கியதாகத் தெரிகிறது. மேலை நாட்டுக் கப்பல்கள் செங்கடலையும், அராபியக் கடலையும் கடந்து நேரிடையாக முசிரிக்கு வருவது சுலபமாக இருந்தது. பாபிலோனியக் கப்பல்களும், எகிப்தியக் கப்பல்களும் இங்கு வந்துள்ளன. மிளகு, சந்தனம், தேக்கு, ரதம், அரிசி, சர்க்கரை, வைரம், வைடூரியம், பருத்தி, மயில், தந்தம், குரங்கு ஆகியவை கப்பல்களில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலையில் தென்மேற்குப் பருவக்காற்று பெரும் மழையைப் பெய்விக்கிறது. அதனால் மலையிலிருந்து மண் சரிந்து கடலுக்குப் போவதால் கடல் மேடிட்டு முசிரி மணல் மேடாகிப் போனது. அத்துடன் அத்துறைமுகம் மறைந்து

விட்டது. முசிரி தற்போது கொடுங்கோளூர் என்று அழைக்கப்படுகிறது. எகிப்தின் பெரினிக்கு துறைமுகமும் சேரநாட்டின் முசிரியும் சமகாலத் துறைமுகங்கள். சமகாலத்திலே அழிந்தும் போனவைகள்.

பாண்டிய மன்னர்களின் பெருந் துறைமுகமாக கொற்கை விளங்கியது. இது தாமிரபரணி ஆற்றின் கழிவுமுகத்தில் மன்னார் வளைகுடாவில் தற்போதைய தூத்துக்குடிக்கு அருகில் இருந்தது. மன்னார் வளைகுடாவில் உயர்ரக முத்து ஏராளமாகக் கிடைத்தது. சங்கும் உயர்ரகப் பவளமும் பெருமளவில் கிடைத்தன. அவை மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி ஆயின. பாண்டியர்களின் கப்பல்கள் சிங்களத் தீவிற்குச் சென்று வந்தன. பொருட்கள் பரிமாற்றத்துடன் அரச குடும்பங்கள் மண உறவுப் பரிமாற்றமும் நடைபெற்றது. மதுரை நகரில் பருத்தி ஆடைகள் நெய்யப்பட்டன. பட்டு நெசவும் நெய்யப்பட்டது. மிக மெல்லிய மஸ்லின் துணிகளும் பட்டு ஆடைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டன. கொற்கை எனும் பெரிய துறைமுகத்துடன் சிறு துறைமுகங்களாக காயல்பட்டினம், குலசேகரப்பட்டினம், தொண்டி என்பவைகளும் இருந்தன. இத் துறைமுகங்கள் இப்பொழுது இல்லை. இவை இந்துமகாக் கடலில் மூழ்கிப்போயின. கொற்கை கி.மு.500லிருந்து கி.பி.500 வரை ஓராயிரம் ஆண்டு காலம் மிகச் சுறுசுறுப்புடன் இயங்கி வந்த துறைமுகம். பாண்டிய அரசர்களின் பெருமை மிக்க செல்வத்தைக் கொண்டு வந்து குவித்த துறைமுகம். முத்து ஒன்றிற்காகவே உலகம் முழுவதும் அறியப்பட்ட துறைமுகம் கொற்கை.

காவிரி ஆறு கடலில் கலக்கும் இடம் காவிரிப்பூம்பட்டினம் என அழைக்கப்பட்டது. அது கடலின் உள்ளே ஓடுவதால் புகார் எனவும் அழைக்கப்பட்டது. கரிகால் பெருவளச் சோழன் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக காவிரி புகும் இடத்தில் செயற்கைத் துறைமுகத்தை உருவாக்கினான். அதுவே காவிரிப்பூம்பட்டினம் துறைமுகமாகும். இத்துறைமுகத்தில் ஏராளமான கப்பல்கள் வருவதும் போவதுமாக இருந்தன. பலதரப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அங்காடிகளில் கொடிகள் நிறையப் பறந்தன. யவனர்களும், அராபியர்களும் பணிநிமித்தம் சுற்றித் திரிந்தனர். அவர்கள் உள்ளூர் மக்களுடன் இணக்கமாகப் பழகினர். இத்துறைமுகத்தில் காவிரி முதல் கங்கை வரையிலான பொருட்கள், கிழக்குக் கடற்கரையின் பவழம், தெற்குக் கடலின் முத்து, வாசனைப் பொருட்கள், வைடூரியம், இமயமலையில் இருந்து நவரத்தினக் கற்கள், தங்கம் ஆகியவை கப்பலில் அனுப்பப்பட்டன. அவைகளுக்கு மாற்றாக குதிரைகளும், தங்கமும் இறக்குமதி செய்யப்பட்டன. சோழர்களின் வணிகக் கப்பல்கள் அல்லாமல் போர்க்கப்பல்களும் நிறைய இருந்தன. பெருமளவிலான மாலுமிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இக் கப்பல்களில் போருக்கான பொறிகளைப் பொருத்தி வைத்திருந்தனர். வணிகப் பொருட்கள்மீது சுங்க அதிகாரிகளால் வரி விதிக்கப்பட்டது.

கடல் மல்லை எனவும், மாமல்லபுரம் எனவும், பிற்காலத்தில் மகாபலிபுரம் எனவும் அழைக்கப்பெறும் துறைமுகம் பல்லவர்களின் காலத்தில் கடல் படையையும், வாணிகக் கப்பல்களையும் கொண்ட கடல் துறைமுகமாக விளங்கி வந்தது. மகேந்திர பல்லவன் காலத்தில் சிறப்படைந்த இத் துறைமுகம் கி.மு.3000 ஆண்டுகளிலேயே நல்ல நிலையில் விளங்கி வந்திருக்கக் கூடும் என ஆங்கிலேய விமர்சகர்கள் கூறுகிறார்கள். கீழை நாடுகளுடனான வணிகம் பல்லவர்கள் காலத்தில் நடந்துள்ளது. சீனக் கப்பல்களும் தமிழகக் கப்பல்களும் அராபிய-திபேத்தியக் கொள்ளையர்களின் தாக்குதல்களுக்கு ஆளாகி இருக்கின்றன. ஆனால் ராஜசிம்ம பல்லவன் தனது கடற்படையை அனுப்பி இதனை முறியடித்திருக்கிறான் என்றும், பல்லவர்கள் பலம் வாய்ந்த கடற்படையைக் கொண்டிருந்ததாலும், வணிகக் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளித்ததாலும், சீன-தமிழக வர்த்தக உறவு தங்கு தடையின்றி நடை பெற்று வந்திருக்கிறது.

கப்பல்கள் இரவில் கரையினை அறிந்து கொள்ள கடற்கரைகளில் உள்ள எல்லாத் துறைமுகங்களிலும் கலங்கரை விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. அபாயமான பகுதி என்பதைக் குறிக்கவும் விளக்குகள் இருந்தன. கோடியக் கரையில் அப்படி ஒரு கலங்கரை விளக்கு இருந்தது. பாண்டிச்சேரி, கடலூர், பரங்கிப்பேட்டை, மண்மேல்குடி, தரங்கம்பாடி, காரைக்கால், நாகப்பட்டினம், ஆளுடையார் பட்டினம், அம்பாள்பட்டினம் எனப் பலத் துறைமுகங்கள் இயங்கி வந்தன.

வாணிபப் பொருட்கள்:

தமிழ்நாட்டிலிருந்து என்னென்ன பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு உலக வர்த்தக சந்தைகளில் விற்கப்பட்டன என்பதை அறிவது அவசியமாகிறது. வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படவில்லை. கீழ்க்காணும் பொருட்கள் உலகச் சந்தையில் விற்கப்பட்டுள்ளன.

வாசனைப் பொருட்கள் : மிளகு, ஏலம், கிராம்பு, கசகசா, பட்டை, இஞ்சி, மஞ்சள், சந்தனம், மல்லி, முந்திரி.

உணவுப் பொருட்கள் : அரிசி, சர்க்கரை, நெய், தேங்காய், வள்ளிக்கிழங்கு, மீன், கருவாடு.

ஆடைகள் : மெல்லிய பருத்தி மஸ்லின் துணிகள், பட்டு ஆடைகள், பூவேலை செய்யப்பட்ட ஆடைகள்.

விலை உயர்ந்த அணிகலப் பொருட்கள் : முத்து, பவழம், சங்கு, ஸ்படிகம், மாணிக்கக்

கற்கள், மரகதக் கற்கள், ஊதா நிறக் கற்கள், நீலக்கல், வைடூரியம், பன்னிறம் காட்டும் வெண்ரத்தினம், யானைத் தந்தம்.

மர வகைகள் : தேக்கு மரம், செடார் மரம், சந்தன மரம், தேக்கினால் செய்யப்பட்ட ரதங்கள், அரக்கு, இண்டிகோ என்னும் தாவர சாயம்.

உலோகங்கள் : உறுதியான இரும்பு, டின், தங்கம்.

பறவைகள் : மயில் எனும் தோகை, புறா, கோழி, போனிக்ஸ் எனும் தங்க நிறப் பறவை, கிளி.

விலங்குகள் : யானை, சிங்கம், புலி, குரங்கு.

மனிதர்கள் : அரசர்களின் அந்தப்புரத்திற்கு அழகிய இளம்பெண்கள், பாடவும் இசைக்கவும் இளம் பையன்கள், பணிப் பெண்கள்.

இவற்றில் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டவை மிளகு, ஏலம், கிராம்பு, அரிசி, பருத்தி ஆடைகள், விலை உயர்ந்த முத்து, வைடூரியம், மாணிக்கக் கற்கள், பவழம், மயில், புறா, கோழி, குரங்கு முதலியவை ஆகும்.

ஒரு முத்தின் எடைக்கு ஈடாக மூன்று மடங்கு எடை சுத்தத் தங்கம் விலையாகப் பெறப்பட்டது. ஒரு தேக்கு மர ரதம் ஏழு கிலோ வெள்ளிக்கு விற்கப்பட்டது. மிளகும் அரிசியும் நெய்யும் சர்க்கரையும் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன. யூத அரசர்கள் மயிலை ஆவலுடன் வாங்கினார்கள். ரோம சாம்ராஜ்ய சீமாட்டிகள் முத்தின் மேல் மோகம் கொண்டிருந்தனர். கிரேக்கர்களும், ரோமர்களும் உறுதியான கலப்படமற்ற இரும்பினைத் தமிழகத்திலிருந்து பெற்றனர். பருத்தி ஆடைகளுக்கும் பூ வேலை செய்யப்பட்ட பட்டு ஆடைகளுக்கும் செல்வந்தர்களிடையே மிகுந்த கிராக்கி இருந்தது.

இறக்குமதி செய்யப்பட்டவை பெரும்பாலும் குதிரைகளே. சிறிதளவில் ஒயினும், கண்ணாடிப் பொருட்களும் தருவிக்கப்பட்டன. பெரும்பான்மையும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருளுக்கு ஈடாகத் தங்கமே பெறப்பட்டது. ஒரு யவனக் கப்பலில் ஐந்து ஆளின் தலைச்சுமையான தங்கம் வந்ததாகச் சங்கப் பாடல்கள் குறிக்கின்றன.

பிலினி என்ற ரோமன் இந்தியக் கப்பல்கள் 75 டன் கொள்ளளவு உடையதாக இருந்துள்ளன எனக் கூறியதாக அறியமுடிகிறது. சீன யாத்திரிகள் பாஹியான் இலங்கையிலிருந்து ஜாவா தீவிற்குச் சென்ற கப்பலில் இருநூறு பயணிகள் இருந்ததாக எழுதியுள்ளான். கி.மு.ஆறாம் நூற்றாண்டுல் சிங்க மகன் என்னும் விஜயன் சிங்களத் தீவினை ஆண்டு வந்தான். அந்த விஜயனை மணப்பதற்கு பாண்டிய அரசிளங்குமரி

சிங்களத் தீவிற்கு கப்பல்களில் அனுப்பி வைக்கப்பட்டாள். இச்செய்தி மகாவம்சா, ராஜாவளி, ராஜரத்தினகாரி என்ற நூல்களிலிருந்து அறியப்பட்டதே.

கிறிஸ்துவிற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே தமிழர்கள் கடலை மிகவும் எளிதில் கடந்துள்ளார்கள். கடலில் அச்சம் என்பதே அவர்களிடம் இல்லாமல் இருந்ததைக் காண முடிகிறது.

சுமத்திரா தீவிலுள்ள போரோபுதூர் என்ற இடத்தில் உள்ள பழமையான கட்டிடங்களில் உள்ள சித்திரங்களில் கப்பல்கள் வரையப்பட்டிருந்தன. அவை மூன்று பாய்களைக் கொண்டதாகவும், அதிகமாக இருபது பேரைச் சுமந்து செல்லும் அளவில் சிறிய கப்பல்களே என ஆங்கில வரலாற்றாளர்கள் எழுதுகின்றனர்.

தென் இந்தியா சங்க காலமான 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே ஒரு காஸ்மோபாலிடன் நாடாக ஆனது. பல மக்கள், பல மொழிகள், பல வகையான ஆடைகள், வழிபாடுகள், விழாக்கள் என ஒரு சிறப்பான காலமாக அந்த ஆண்டுகள் செழிப்புடன் விளங்கின.

பௌத்த ஜாதகக் கதைகளில் இந்தியக் கப்பல்கள் பாபிலோனின் பாவேறு என்ற இடத்திற்குச் சென்றதாகக் கூறுகிறது. பௌத்த பிட்சுகள் தங்கள் வரலாற்று நூல்களில் தமிழர்கள் நாற்பத்து நான்கு ஆண்டு காலம் சிங்களத்தில் ஆட்சி புரிந்தபோது நேர்மையுடன் நீதி நிர்வாகம் நடத்தியதாகவும், சிங்களத் தீவின் மேன்மைக்கு உழைத்தவர்கள் எனவும் எழுதியுள்ளார்கள்.

தமிழர்கள் பண்டைக் காலத்திலிருந்தே இவ்வாறு பல்வேறு நாடுகளுடன் கடல்வழி வாணிகம் நடத்திச் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து வந்துள்ளனர் என்பது இதனால் தெளிவாகின்றது.

பாடம்-2

தமிழனின் கடல்வழி வாணிப வரலாறு

தமிழனின் கடல்வழி வணிகம் கிறிஸ்துவிற்கு முன்பு 1700களில் துவங்கி கிறிஸ்துவுக்குப் பின்னால் 1300 வரை நடந்தது. இந்தச் சாதனையை முறியடித்த நாடு என உலகில் எந்த நாடும் இல்லை. எகிப்தியக் கடல் வாணிகமும், அதன் கப்பல் போக்குவரத்தும் கிறிஸ்துவிற்கு முன்பாகவே ஆரம்பித்து கிறிஸ்துவிற்கு முன்பாகவே முடிந்தது. ரோமர்களும் கிரேக்கர்களும் கி.மு.நூறுகளில் தொடங்கி கி.பி.300 வரையிலேயே கடல் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். பாலஸ்தீன யூதர்களின் வணிகம் கிறிஸ்துவுக்கு முன்பாகவே முடிந்து போய்விட்டது. பாபிலோன், அசிரியா, சுமேர் என எல்லா நதிக்கரை நாகரிக நாடுகளும் தங்களின் வணிகத்தையும், நாகரிகத்தையும் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பாகவே இழந்து விட்டனர். அராபியர்களின் கடல்வழி வணிகம் நபிகள் நாயகம் தோன்றி இஸ்லாம் மதத்தை நிறுவிய பிறகே தோன்றுகிறது. சீனத்தின் கடல்வழி வணிகம் கி.மு.100 ஆண்டுகளில் இந்தியா, இலங்கையில் தொடங்குகிறது. அவர்கள் மேலைக் கடல்களில் செல்லவில்லை. அவர்களின் விற்பனைப் பொருள் பட்டும் பீங்கானுமாகவே இருந்தன.

மெசபடோமியாவுடன் வணிகம்:

இன்றைய ஈராக் ஆதிகாலத்தில் மெசபடோமியா என அழைக்கப்பட்டது. அங்கே திகிரிஸ், எபிரேட்டஸ் என இரு நதிகள் பாய்ந்து வளம் சேர்த்தன. இரு நதிகளுக்கிடையே இருந்ததினால் அந்த இடம் மெசபடோமியா என அழைக்கப்பட்டது. இவ்விரு நதிகளும் பெர்சிய வளைகுடாவில் கடலில் கலந்தன. இச் சமவெளிதான் ஈடன் கார்டன் எனவும், இங்குதான் ஆதாம் ஏவாள் பிறந்தனர் எனவும் பைபிள் கூறுகிறது. மெசபடோமியா நான்கு நதிக்கரை நாகரிகங்களில் ஒன்றாக இருந்தது. இது இரண்டு பகுதியாகப் பிரிந்து வடபகுதி அக்காடு எனவும், தென்பகுதி சுமேர் எனவும் கூறப்பட்டது. இப்போதுள்ள ஈராக், சிரியா, ஜோர்டான், இஸ்ரேல் மற்றும் அவை சார்ந்த இடங்களும் மெசபடோமியா என்றே அழைக்கப்பட்டன. தெற்குப்பகுதியான சுமேரின் நகரங்களாக எரிச், எரிடு, லகாஷ் மற்றும் ஊர் என்பவை இருந்தன. கி.மு.2600ல் ஊர் என்ற இடத்தில் வலிமை மிக்க அரசர்கள் ஆண்டு வந்தார்கள். ஹமுரபி என்ற மன்னன் முழு மெசபடோமியாவையும் தன் வசம் கொண்டு வந்தான். ஊர் எனும் மிக முக்கியத் தலைநகரம் மற்றும் நிப்பூர் எனும் நகரம் தமிழ்ப் பெயர்களாகவே இருந்தன. ஊர் என்ற இடத்தில்தான் யூதர்களின் முதல் குருமாரான ஆபிரகாம் பிறந்து வளர்ந்ததாகவும் கூறப்படுகிறது.

சிந்துவெளித் தொடர்பு:

மெசபடோமியா நதிக்கரை நாகரிக வளர்ச்சிக் காலத்திலேயே சிந்து நதிக்கரை நாகரிகம் என அரப்ப கலாச்சாரம் இந்தியாவின் வடமேற்கில் உருவாகி வளர்ச்சி பெற்றிருந்தது. கடல் வழியாகவும், நிலம் வழியாகவும், சிந்துவெளியும், பாபிலோனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தன. சிந்துவெளி மக்கள் அங்கே தங்குவதும், சுமேரிய மக்கள் இங்கே வந்து தங்கியும் வணிகம் நடத்தி வந்துள்ளனர். தமிழ்நாட்டிலிருந்து சுமேருக்கு நேரிடையான வணிகம் கடல்வழியாகவே நடந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. ஆனால் தமிழ்நாட்டின் பொருட்கள் சிந்துவெளிக்கு கடல் மூலமாகச் சென்றுள்ளன. இந்த முறையில் ஒரு வணிகத் தொடர்பு உண்டாகி இருக்கிறது. சுமேரில் ஊர், நிப்பூர் என்ற பெயரில் நகரங்களின் பெயர்கள் இருந்ததால் தமிழர்களின் தொடர்பு இருந்ததற்கான சான்றாகவே அவை உறுதிப்படுத்துகின்றன. சுமேரின் சல்லாடியன் என்ற இடத்தில் வணிகம் நடந்துள்ளது. தென் இந்தியத் தேக்கு மரங்கள் ஊர் என்ற நகரின் இடிபாடுகளில் கிடைத்ததாக அகழ்வாய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த மரங்கள் 4000 ஆண்டுகள் பழமை வாய்ந்தவை எனவும் அறியப்படுகிறது.

கிரேக்க நாட்டின் கவிஞரான ஹோமர், தென் இந்தியாவுடனான வணிகம் பற்றிப் பாடியுள்ளார். இங்கிருந்து தங்கம், டின், பட்டு, முத்து, வாசனைப் பொருட்கள் அசிரியாவிற்குச் சென்றதை ஹோமர் பாடியுள்ளார். இங்கிருந்து தங்கம் பெருமளவில் அங்குச் சென்றதற்கான ஆதாரங்களை கல்வெட்டுக்களில் இருந்து அறிந்து எம்.எம்.பெரோட்ஸ், சிப்பியிஸ் என்ற இரு அகழ்வாய்வாளர்கள் கூறியுள்ளனர். நினவே என்ற அசிரியாவின் நகரில் நிறைய தங்கம் இருந்துள்ளது. அதனைச் சிரியர்களும் மெசபடோமியர்களும் கப்பமாகக் கொடுத்தனர் எனவும் எகிப்திய வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது. அந்தக் காலத்தில் உலோகங்களை எடுத்து உபயோகிக்கும் வழக்கம் இந்தியாவில்தான் அதிக அளவில் நடைபெற்றது. அதனால் தங்கம் பெருமளவில் நினவே என்ற நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் என்று கருத இடமுள்ளது.

தமிழ்நாட்டிலிருந்தும், சிந்து நதிக்கரையிலிருந்தும் ஏராளமான பருத்தி ஆடைகள் பாபிலோன், சுமேர், பாலஸ்தீனம், கிரேக்க நாடுகளுக்குச் சென்றுள்ளன. கி.மு.727-722ல் அசிரியாவை ஆண்டு வந்த நான்காம் சல்மநேசர் என்ற அரசர் இங்கிருந்து யானைகளைப் பரிசாகப் பெற்றிருக்கிறார். கி.மு.604-562 ஆண்டுகளில் ஆட்சி புரிந்த மூன்றாம் நெபுசட்நெசர் காலத்திய அரண்மனைகளில் இந்திய செடார் மரங்கள் நிறைய உபயோகிக்கப் பட்டிருப்பதாகவும் அறியமுடிகிறது.

பாபிலோனியாவுடன் வணிகம்:

இந்திய வியாபாரி முதன்முதலாக மயில் எனும் தோகையினை பாபிலோனுக்கு எடுத்துச் சென்றதாக பவேரு-ஜாதகா என்ற நூலில் செய்தியாக உள்ளது. பாபிலோனுக்கு தென்னிந்தியச் சந்தனமும் அரிசியும் சென்றுள்ளதாக ஹீப்ரு மொழியில் உள்ள பைபிளில் கிங்ஸ் I மற்றும் கிரானிக்கல்ஸ் IIல் எழுதப்பட்டுள்ளது. இப்பொருட்கள் தமிழ்ப் பெயர்களாலேயே அழைக்கப்பட்டு வந்தன.

கி.மு. எட்டு, ஏழு, ஆறாம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டுடன் மேற்கு ஆசிய நாடுகள் வணிகத் தொடர்பு கொண்டிருந்தன என்பதை அங்கே பல தமிழர்களின் குடியிருப்புகள் இருந்ததிலிருந்து அறியமுடிகிறது. கௌடில்யர் தமது 'அர்த்தசாஸ்திரத்தில்' விலை உயர்ந்த பொருட்கள் தென் இந்திய தீபகற்பத்திலிருந்து மேலை நாடுகளுக்குச் சென்றன என்றும் தங்கம், வைரம், முத்து, சங்குகள் தெற்கிலிருந்து சென்றதாகவும், வடக்கிலிருந்து கம்பளிப் போர்வைகளும், தோல்களும், குதிரைகளுமே சென்றன எனவும் எழுதியுள்ளார். மதுரையில் நெய்யப்பட்ட மேகம் போன்ற பருத்தி ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டதாக தொல்காப்பியம் தெரிவிக்கிறது.

கிரேக்க மொழியில் 'அரிசி' என்னும் தமிழ்ச் சொல் 'ஓரிசி' என்று அழைக்கப்பட்டது. தமிழில் நீள் மிளகினை 'பிப்பிலி' என அழைக்கப்படுவது கிரேக்க மொழியில் 'பெப்பரி' ஆனது. தமிழில் 'மயில்' எனும் பறவையை 'தோகை' என்று அழைக்கப்படுவது ஹீப்ரு மொழியில் 'துக்கி' எனக் கூறப்பட்டது. தமிழில் 'குரங்கு' என அழைக்கப்பட்டது ஹீப்ருவில் 'கோல்' என அழைக்கப்பட்டது.

கிறிஸ்துவிற்கு முன்பாக 2000 ஆண்டுகளில் மெசபடோமியாவுடனான வர்த்தகம் நடைபெற்றுள்ளது. அங்கு நதிக்கரை நாகரிக நகர்களில் தமிழர்கள் பெருமளவில் சென்று தங்கினார்கள். அவர்களால் ஒரு காலனியாக உருவாக்கப்பட்ட ஓரிடம் தமிழ்ப் பெயரிலேயே உளர் என்று அழைக்கப்பட்டது. பின்னாட்களில் அந்த இடமே சுமேரிய நாட்டின் தலைநகராக ஆனது. மற்றொரு பெரிய நகரம் தமிழில் நிப்பூர் என்று அழைக்கப்பட்டது. அங்கும் தமிழர்கள் தங்கியிருந்து வணிகம் செய்து வந்தனர்.

எகிப்திய நாட்டுடன் வணிகம்:

'நைல் நதியின் சிறந்த பரிசு' என வரலாற்றுத் தந்தை கிரேக்கர் ஹெரடோட்டஸ் அழைத்த எகிப்து, ஆப்பிரிக்கக் கண்டத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ளது. நைல் நதி எகிப்திற்கு வளம் கொடுத்தது. அதனால் அதுவும் நான்கு நதிக்கரை நாகரிகங்களில் ஒன்றாக அமைந்தது. மேற்கில் பாலை நிலமும் கிழக்கில் செங்கடலுமாக உள்ள எகிப்து நாட்டில்

நைல் நதியிலிருந்து கால்வாய்களின் மூலம் நீரைச் செலுத்தி உணவு தானியங்களைப் பயிரிட்டார்கள். கி.மு.3500 முதல் 2700 வரை பிரமிடுகளைக் கட்டினார்கள் எகிப்தியர். சூரியக் கடவுளின் வழி வந்தோரெனக் கூறிக் கொண்ட பரோவா என்ற அரசர்கள் தங்களுக்கு மறுவாழ்வு உண்டு என்ற நம்பிக்கையில் தங்களின் உடலைப் பாடம் செய்து ஓர் அரசன் வாழ்விற்குத் தேவையான சகல பொருட்களும் அடிமைகளும் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்ட பிரமிடுகளில் வைத்து மூடி வழியை அடைத்து விடுவார்கள். பரோவாக்களில் கடைசியாக வந்த சிறப்புமிக்க மன்னன் இரண்டாம் ராம்சேஸ் என்பவன் அபுசிம்பல் என்ற இடத்தில் பெரிய கோயில்களைக் கட்டினான்.

தமிழகக் கப்பல்கள் பாரசீக வளைகுடா நாடுகள், அரேபியா, எகிப்து ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளன. செங்கடலில் உள்ள எகிப்தின் துறைமுகமான பெரினிக்கி வரை இங்கிருந்து பொருட்களைக் கொண்டு சென்றுள்ளன. இதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. எகிப்தியர்கள் நைல் நதியில் செலுத்திய படகுகளுக்கு முற்றிலும் மாறுபட்ட அமைப்பை உடைய ஓவியங்கள் எகிப்தில் உள்ளன. செங்கடல் பகுதியில் உள்ள ஜெபல்-எல்-அரக் என்னுமிடத்தில் வாடி ஹம்மத் என்னும் துறைமுகத்தைத் தொட்டு இருக்கும் பகுதிகளில், இப்போது வறண்டு போயிருக்கும் நிலத்திருந்து, மிகவும் மிருதுவான பாரெஸ் மரத்தில் உருவாக்கப்பட்ட எகிப்திய படகுகளுக்கும் வலுவான உறுதியான உயர் ரக மரங்களினால் உருவாக்கப்பட்ட வேறு சில படகுகளுக்கும் இடையில் நிகழ்ந்த கடற்போரைக் காட்டும் ஓவியங்கள் ஒரு வாளின் உறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உறுதியான மரங்கள் என தேக்கு உட்பட பலவகையான மரங்கள் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் நீலகிரி, ஆனைமலைப் பகுதிகளில் வளர்ந்து வருகின்றன. வணிகத் தொடர்பான ஒரு சச்சரவில் எகிப்தியர்கள் தமிழர்களைத் தடுத்திருக்கலாம். அதன் விளைவாகக் கடலில் போர் நடந்திருக்க வாய்ப்புண்டு. இறக்குமதி செய்யப்பட்டவை எனவும், எகிப்திற்குத் தெற்கே இருக்கும் நாடுகள் எனக் குறிப்பிடப்படுவதும், அங்கிருந்து தங்கம், தந்தம் பெறப்பட்டது என்பதும் தமிழ்நாட்டையே குறிக்கும். இங்கிருந்து கோழியைக்கூட ஏற்றுமதி செய்தார்கள்.

சென்ற நூற்றாண்டில் ஒரு பிரமிடில் இருந்த ஒரு மயிலினை அகழ்வாய்வாளர்கள் ஆராய்ந்தனர். அந்த மம்மி பரோவாவின் வம்சாவளியில் வந்த பதினெட்டாவது பரோவாவினுடையது எனவும், அது கிமு 1462ல் அடக்கம் செய்யப்பட்டது எனவும் அறிந்தார்கள். பேழையைத் திறந்து மம்மியினை ஆராய்ந்தபோது, அதன் உடலில் சுற்றப்பட்டிருந்த துணி, தென்னிந்திய பருத்தி மஸ்லின் துணி எனவும், அத்துணியில் தோய்க்கப்பட்டிருந்த சாயம் இந்தியத் தாவரச் சாயமான இண்டிகோ எனவும் புரொபசர் லாசர் கூறினார். அத்துணியில் உள்ள சாயம் இந்தியா தவிர வேறு எங்கும் தயாரிக்கப்படுவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

நிலவழி வியாபாரிகளில் ஒருவர் ஜோசப் என்னும் யூதர் ஆவார். இவர் இந்தியப் பொருட்களை ஒட்டகங்களின் மூலமாக கி.மு.1700 ஆண்டுகளில் கொண்டு சென்று எகிப்து, பாலஸ்தீனம், பாபிலோன், அசிரியா ஆகிய இடங்களில் விற்றதாக நம்பகமான தகவல்கள் கிடைக்கின்றன. கடற் கொள்ளையர் எரித்திரியன் கடல் எனப்படும் செங்கடலிலும் அரபிக் கடலிலும், வங்கக் கடலிலும் அட்டகாசம் செய்து வந்தனர். இந்த அரபிக் கொள்ளையரை அடக்குவதற்காகவே ரோம அரசர்கள் போர்க் கப்பல்களை வணிகக் கப்பல்களுக்குத் துணையாக அனுப்பி வந்தனர். இதுபோலவே வங்கக் கடலில் சோழர்களின் கடற்படை தமிழர்களின் வணிகக் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளித்தன.

புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள், மெசபடோமியா நகரங்களில் தமிழரின் வாணிபப் பொருட்களைத் தோண்டி எடுத்துள்ளனர். சாலமன் எனும் மன்னனுக்கு எடுத்து வரப்பட்ட விலை உயர்ந்த பொருட்களும் இவற்றில் அடங்கும். தென்னிந்திய மலபார் காடுகளில் வளரும் சந்தன மரம் அப்பொருட்களில் ஒன்று. இந்தியாவிலுள்ள தொல்குடியினராகிய தமிழரே முதன் முதலில் இந்துமாக் கடலில் மரக்கலம் செலுத்தியவர்கள் எனத் தற்போது கருதப்படுகிறது.

4000-4500 ஆண்டுகளுக்கு முற்பட்ட சுமேரியக் கல்வெட்டுகள் மகன்-மொலுக்கா நகரங்களிடையே வாணிபம் நிலவியதாகக் காட்டுகின்றன. மகன் என்ற இடம் விலையுயர்ந்த மரக்கட்டைகளை ஏற்றுமதி செய்தது. இந்துமாக்கடலில் நெடுந்தொலைவில் இருந்த மொலுக்காவிலிருந்து பொன், முத்துக்கள், விலை உயர்ந்த கற்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. மொலுக்கா கருப்பர் நாடு என வழங்கப்பட்டது. அங்கு வாழ்ந்திருந்த மக்களது நிறத்தை ஒட்டி இப்பெயர் வழங்கப்பட்டிருக்கலாம்.

மொலுக்கப் பாய்மரக் கப்பல்கள் உருவத்தில் பெரியவை. அவற்றை 'மகுளிம்' என சுமேரிய ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன. மகுளம் என்ற சொல்லினை மஞ்சி என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். மரக்கலம் என்ற தமிழ் மொழியின் சொல்லே மகுளம் எனச் சுருங்கி இருக்கலாம். தமிழர்களைத் தவிர மற்றவர்களால் நாக்கை மடித்துப்பேச வராது. கொற்கை என்பதை "கோல்கோய்' என்றே கிரேக்கர்களும் ரோமர்களும் கூறி வந்தனர். மரக்கலம் மகுளம் என ஆனது.

அறிஞர் பலர் அன்னியக் கப்பல்களை சுமேரியக் கப்பல்கள் என்றே முதலில் கருதினார்கள். ஆனால் இந்தியத் தொல்பொருள் ஆய்வாளர் எஸ்.ஆர்.ராவ் பல ஆய்வுகளுக்குப் பிறகு மரக்கலங்கள் தென் இந்தியாவைச் சார்ந்தவை என அறுதியிட்டுக் கூறியுள்ளார்.

பாரசீக வளைகுடாவில் அரபிக்கடல், செங்கடல் இவற்றின் கரை ஓரங்களிலிருந்த

துறைமுகங்களைத் தொட்டுச் சென்ற இந்த மரக்கலங்கள் தொல் தென்னிந்திய நாடான மகன் என்ற இடத்திலிருந்து வந்திருக்கலாம்.

சுமேரியப் பாடல்கள் 'தில் மன்' - கதிரவன் எழுகின்ற நாடு எனக் கூறப்படுவது கிழக்கேயுள்ள ஒரு நாட்டைக் குறிப்பிடுவதாகவே உள்ளது. கிழக்கே உள்ள நாடு பஹ்ரைன் தீவுகள் எனச் சிலரால் சொல்லப்பட்டது. ஆனால் அது உண்மை அல்ல. கிரேமர் என்பவர் அதற்கான காரணத்தை விளக்குகிறார்.

அவைகளில் முக்கியமானது தந்தங்கள் கண்டுபிடிக்கப்பட்டதே. பஹ்ரைனில் யானைகள் கிடையாது. நீர்க் கடவுள் கோயில் இல்லை. ஆகவே தில்மன் என அழைக்கப்பட்டது இந்திய நாட்டின் தொல் நாகரிகத்தை, நீர்க் கடவுள், மரக்கலம் செலுத்துதல், பழக்கப்பட்ட யானைகள் உடைய நிலமாகத் தென் இந்தியாவே இருந்தது. ஆகவே தில்மன் என்பது தென் இந்தியாவைக் குறிப்பதாகவே உள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள ஆதாரங்கள் அனைத்தும் அலெக்சாந்தர் கோந்த்தோல் எழுதிய 'இந்துமாக் கடலின் மர்மங்கள்' என்ற நூலிலிருந்து திரட்டப்பட்டவை ஆகும்.

சாலமனுடன் வாணிபம்:

ஜெருசலத்தை தலைநகராகக் கொண்டு யூதர்களை ஆண்டு வந்தவன் சாலமன் என்ற அரசன் ஆவான். இவன் யூதக் கடவுளுக்கு கோவிலைக் கட்டுவதற்கு ஹிராம் என்ற கட்டிடக் கலைஞனை நியமித்தான். ஹிராம், ராணி ஷீபா என்ற ராணியை ஜெருசலத்திற்கு அழைத்து வந்தான். அவள் ஏராளமான பரிசுப் பொருட்களையும் தங்கத்தையும் சாலமனுக்கு அளித்தாள். அவளுக்கு தங்கம் ஓபீர் என்ற இடத்திலிருந்து கிடைத்ததாகக் கூறுகிறாள். ஓபீர் எங்குள்ளது என அறிய சாலமன் தனது கப்பல்களை அனுப்பி வைத்தான். அக் கப்பல்கள் செங்கடலில் வடகோடியில் உள்ள எலாத் என்னும் துறைமுகத்திலிருந்து புறப்பட்டன. பின்னர் எகிப்தின் துறைமுகமான பெரினிக்கி வழியாக அராபிய வளைகுடா சென்று பெர்சிய வளைகுடாவிற்குச் சென்றன. பின்னர் சிந்துவெளியில் துறைமுகங்களுக்குச் சென்று பின் தெற்காக சேர நாட்டின் துறைமுகமான முசிரிக்குச் சென்றன. முசிரித் துறைமுகத்திலிருந்து தங்கம், வெள்ளி, யானைத் தந்தம், குரங்குகள், மயில் என்னும் தோகைகள் ஆகியவற்றை வாங்கிக்கொண்டு அக் கப்பல்கள் எலாத் துறைமுகத்திற்குத் திரும்பின.

சாலமன் ஒவ்வொரு மூன்று ஆண்டிற்கு ஒருமுறை தனது கப்பல்களை முசிரிக்கு அனுப்பி மேலே குறிப்பிடப்பட்ட பொருள்களை வாங்கி வந்துள்ளான். இச்செய்திகள் பைபிளில் பழைய ஏற்பாட்டில் (ஓல்டு டெஸ்டமெண்ட்) பதிவு செய்யப்பட்டுள்ளன.

சாலமனிடம் கடலில் செல்லும் கப்பல்கள் ஏராளமாக இருந்தன. ஒவ்வொரு மூன்று ஆண்டிற்கு ஒரு முறை ஹிராம் என்னும் கட்டிடக் கலைஞனுடன் கப்பல்களை அனுப்பி வைப்பான். அக்கப்பல்கள் தங்கம், வெள்ளி, யானைத்தந்தம், குரங்குகள் மற்றும் மயில்களுடன் திரும்பின.

சாலமனின் வியாபாரிகள் குதிரைகள், ரதங்கள், ஆகியவற்றை முசிரி என்ற இடத்திலும் குயி என்ற இடத்திலும் ஒரு ரதத்திற்கு ஏழு கிலோ வெள்ளியும் ஒரு குதிரைக்கு இரண்டு கிலோ வெள்ளியும் விலையாகக் கொடுத்து வாங்கினார்கள்.

தங்கம் கிடைக்கும் இடத்தை ஹீப்ரு மொழியில் தார்ஷீஷ் என அழைத்தார்கள். சாலமன் காலத்தில் தென் இந்தியாவில்தான் தங்கம் கிடைத்தது. எருமையூர் என அழைக்கப்பட்ட கோலார் தங்கச் சுரங்கத்திலிருந்து தங்கம் வெட்டி எடுக்கப்பட்டது. தமிழ்நாட்டில் செல்வந்தப் பெண்கள் மட்டுமல்லாமல் ஆண்களும் தங்கத்தினால் அணிமணிகளை அணிவதை வழக்கில் கொண்டிருந்தார்கள்.

தங்கம் ஆரம்ப காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டது. பிற்காலத்தில் விற்ற பொருளுக்கு விலையாகக் கொண்டு வரப்பட்டது.

ரோமர்களுடன் வணிகம்:

ரோமாபுரி என்பது தற்போதைய இத்தாலி. ரோமர்களின் ஆட்சியில் கிரேக்கமும் சிரியாவும் பாலஸ்தீனமும் எகிப்தும் வட ஆப்பிரிக்க நாடுகளும் அடிமைப்பட்டிருந்தன. ஆக்டேவியன் அகஸ்டஸ் என்ற மன்னன் ரோம சாம்ராஜ்யம் முழுவதையும் ஆட்சி செய்தான். இவனது ஆட்சிக்காலம் மிக உன்னதமானது என்கின்றனர். இவனுடைய காலத்தில் மக்கள் அமைதியுடன் ஆக்கப் பணிகளில் ஈடுபட்டார்கள். 200 ஆண்டுகாலம் இவனுக்குப் பின்னால் வந்த அரசர்களும் அமைதியான வாழ்க்கையினை மக்களுக்கு அளித்தார்கள்.

ரோமர்களிடம் ஏராளமான போர்க் கப்பல்கள் இருந்தன. அகஸ்டஸ் காலத்தில் போர் எதுவும் இல்லாததினால் அக்கப்பல்களில் பல வணிகக் கப்பல்களாக மாறின. ரோமர்களின் வணிகக் கப்பல்கள் முசிரித் துறைமுகத்திற்கும், கொற்கை, புகார் துறைமுகத்திற்கும் வந்து ஏராளமான பொருட்களை வாங்கிச் சென்றன. அவர்களின் கப்பல்கள் பெரினிக்கி துறைமுகத்தில் சரக்குகளை இறக்கின. ஒட்டகங்களின் மேல் ஏற்றி நைல் நதி வழியாகப் படகுகளில் எடுத்துச் சென்று அலெக்சாண்டிரியா துறைமுகத்தில் மீண்டும் கப்பல்களில் ஏற்றி, அங்கிருந்து மத்திய தரைக்கடல் வழியாக ரோமிற்குப் பொருட்கள் சென்றன.

முத்துக்களோடு விலை உயர்ந்த ரத்தினம், வைரம், வைடூரியம், மரகதம், ஊதா நிறக் கற்கள் எனப் பலவிதமான கற்களையும் இங்கிருந்து வாங்கிச் சென்றார்கள். ரோமர்களின் கப்பல்கள் பெரியாறு முகத்துவாரத்தில் நெருக்கி அடித்து நின்றன. கடற் கொள்ளைக் காரர்களைத் துரத்தவும், கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கவும் ரோமக் கடற்படை வணிகக் கப்பல்களோடு உடன் வருவதுடன், முசிரியில் 2000 ரோமப் படை வீரர்கள் பாதுகாப்பிற்காக நிறுத்தி வைக்கப்பட்டனர். வெள்ளைத் தோலுடன் வந்த ரோம கிரேக்கர்களை யவனர்கள் எனத் தமிழர்கள் அழைத்து வந்தனர். தமிழ்நாட்டிலும் மலபாரிலும் பல இடங்களில் தங்களின் குடியிருப்புகளை உருவாக்கித் தங்கினார்கள். ரோம நாணயங்கள் பொள்ளாச்சி, வெள்ளலூர், கருவூர், புதுக்கோட்டை, களியம்புத்தூர் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளதால் அவர்கள் இந்தப் பாதைகளை கொற்கை துறைமுகத்திற்குச் செல்லவும், புகார் துறைமுகம் செல்லவும் பயன்படுத்தி இருப்பார்கள் என்பது உறுதி ஆகிறது.

வாசனைப் பொருட்களான மிளகு, ஏலம், கிராம்பு பெருமளவில் ரோம் நாட்டிற்குச் சென்றன. நெய், சர்க்கரை, அரிசி, மணம் தரும் பொருட்கள், தந்தங்களும் சென்றுள்ளன. ஒரு யட்ச பெண் கடவுளின் உருவம் மிக நுண்ணிய வேலைப்பாடுடன் செதுக்கப்பட்ட தந்தச் சிலை ஹெர்குலானெயம் என்ற இடத்தில் ரோம் தலைநகரில் அகழ்வாய்வில் கிடைத்துள்ளது. ரோமர்கள் இண்டிகோ என்னும் தாவரச் சாயத்தினையும், அரக்குகளுமான சாயம் தேய்க்கும் பொருட்களையும் வாங்கிச் சென்றனர்.

தென் இந்தியாவிலிருந்து ரோமிற்கு எதிர்காலம் அறிந்து கூறும் ஜோஸ்யர்கள் சென்று பிழைப்பு நடத்தி இருக்கிறார்கள். யானைகளுடன் அதனை அடக்கி ஆளும் பாகர்களும் சென்றுள்ளனர். இந்தியப் பெண்கள் சிலர் உடலை விற்று வாழ்ந்ததாகவும் செய்திகள் உள்ளன. கரிகால் சோழன் அமைத்த செயற்கைத் துறைமுகமான புகாரில் ரோமர்கள் வணிகர்களாகவும் மாலுமிகளாகவும் போர் வீரர்களாகவும் இருந்தனர். போர் ஆயுதங்களைச் செய்து தருவோர்களாகவும், போர்க் கப்பல்களில் போர்க் கருவிகள் பொருத்துவது தொடர்பான வல்லுனர்களாகவும் இருந்துள்ளனர்.

அகஸ்டஸ் சீசரின் ஆட்சிக் காலத்தில், பாண்டியர்கள் தூதுவர்களை அனுப்பியுள்ளனர். கி.மு.20ல் பாண்டிய அரசின் தூதுவர்கள் சென்றிருக்கின்றனர். கிரேக்கத்தில் முதல் பூமி நூல் எழுதியவரான ஸ்டாபோ, "பாண்டியரின் தூதுவரை மிகவும் மரியாதையுடன் வரவேற்றவர் ரோமின் சீசரான அகஸ்டஸ்" எனத் தமது ஸ்டாபோ ஜியாகிரபி XV-ல் குறிப்பிடுகிறார்.

கி.பி.300 ஆண்டுகளில் நீரோ சீசராக இருந்த காலத்திலும் கூட ரோமர்கள் இங்கிருந்து பொருட்களை வாங்கியபடியே இருந்தனர். ரோமின் தங்கம் பெருமளவில் இங்கே வந்தது.

தங்கம் கட்டிகளாகத் தரமுடியாதபோது ரோமர்களின் சொந்த நாணயத்தையும் தங்கக் காசுகளையும் அனுப்பி வைத்தார்கள். இதுபற்றிப் பிலினி என்னும் ரோம செனட்டர் கூறிய புகாராக "ஆண்டுதோறும் நமது சாம்ராஜ்யத்தின் செல்வத்தினை இந்தியா பிழிந்தெடுக்கிறது. தங்கம் அங்கு செல்லாத ஆண்டு என எதுவுமே இல்லை. ரோமாபுரியின் செல்வச் சீமாட்டிகளின் பேராசைகளுக்கும், அவர்களது ஆடம்பர வாழ்க்கைக்கும் நமது செல்வம் ஆண்டிற்கு 55 கோடி செஸ்டிராஸ் இந்தியா செல்வதைத் தவிர்த்தாக வேண்டும்" என்று கூறியதாகத் தெரியவருகிறது.

அகழ்வாய்வுகளில் கி.பி. 41-54 ஆண்டிற்கான சக்ரவர்த்தி கிளாடியஸ் உருவமும் பிரிட்டனை அடிமை கொண்டதுமான எழுத்துகளும் கிடைத்துள்ளன. கி.பி.300 ஆண்டுகளில் ஐரோப்பாவில் ரோம சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்ற பிறகு ஐரோப்பாவுடனான வணிகம் ஸ்தம்பித்துப் போனது. அதன் பிறகு அராபிய இடைத் தரகர்கள் பொருட்களை இங்கே வாங்குவதும் மேற்காசிய நாடுகளில் விற்பனை செய்வதுமாக அந்த வணிகம் தொடர்ந்தது.

சீனத்துடனான வாணிபம்:

சீனர்களின் தொடர்பு வரலாற்றுத் தொடக்க காலத்திலேயே ஆரம்பம் ஆகிறது. அரிசியை சீனர்களுக்கு அறிமுகம் செய்தவர்கள் சிந்துவெளியினர். பருத்தியை முதலில் விளைவித்து உலகிற்கு வழங்கிய பெருமை சிந்துவெளியைச் சாரும். காட்டில் திரிந்த கோழிகளை வளர்ப்புக் கோழிகளாக ஆக்கியதும் அதனைச் சீனத்திற்கு பர்மா வழியாக அறிமுகப்படுத்தியவர்களும் சிந்துவெளியினர்.

தென்நாட்டுடனான சீனாவின் கடல்வழி வணிகம் கி.பி.முதல் நூற்றாண்டுகளில் தொடங்கியது. சீனர்களின் கப்பல்கள் புகார் துறைமுகத்திற்கும், முசிரித் துறைமுகத்திற்கும் வந்தன. தமிழகக் கப்பல்கள், கமத்திரா தீவைக் கடந்து சீனக் கடலில் மியட்நாம் வழியாக சீனம் சென்றன. தமிழர்கள் சீன நாட்டில் குடியேறினர். சீனர்கள் தமிழ்நாட்டில் வந்து குடியேறினர். வணிகம் மட்டுமல்லாமல் கலாசாரப் பரிமாற்றமும் நிகழ்ந்தது.

மிளகும் ஏலமும் கிராம்பும் அதிக அளவில் சீனத்திற்குச் சென்றன. சீனத்தின் பட்டினையும் பீங்கான் பொருட்களையும் தமிழர்கள் வாங்கினர். சீனப் பட்டாசுகள் சீனக் காகிதம் இங்கே அறிமுகமாகியது. புத்த மதத் தத்துவ ஞானியான போதிதர்மா தென் இந்தியாவிலிருந்து சீனத்திற்குச் சென்றார். அவரால் சீனத்தில் பௌத்த மதம் தழைத்தது. அத்துடன் ஜப்பானியர்களால் போற்றப்படும் 'சென்' என்ற புதிய தத்துவக் குழுவினர் உருவாக அவரே பொறுப்பாளியாக இருந்தார்.

சோழர்களின் ஆளுமை:

சோழ மன்னர்கள் பலம் வாய்ந்த பெரும் கடற் படையைக் கொண்டிருந்தனர். அதன் மூலமாக அவர்கள் கிழக்கு வங்கக் கடல் முழுவதையும் மேற்கு மலபார் கடற்கரைகளையும் தங்களின் ஆட்சியில் வைத்திருந்தார்கள். வங்கக் கடல் 'சோழனின் ஏரி' என அழைக்கப்பட்டது. வணிகக் கப்பல்கள் சில நேரங்களில் கப்பல் படை வீரர்களையும் ஏற்றிச் சென்றன. நிலத்தில் நடைபெறும் போர்களைப் போலவே கப்பலின் தளங்களில் நின்றபடி சோழ வீரர்கள் போரிட்டனர். இக் கடற்படையின் உதவியினைக் கொண்டே சோழ அரசர்கள் 'மாபெரும் இந்தியாவை வெற்றி கொண்டார்கள்' என வி.டி.மகாஜன் தமது 'ஏன்சியன்ட் இந்தியா'வில் எழுதுகிறார்.

சோழப் பேரரசனான ராஜராஜன் கடல் வழியாகக் கப்பல்களில் வீரர்களைக் கொண்டு சென்று கலிங்க நாட்டை வென்றான். அத்துடன் மாலத் தீவுகள் முழுவதையும் வென்று தனது ஆளுகையில் கொண்டு வந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ராஜராஜனின் மகன் முதலாம் ராஜேந்திரன் தனது கடற்படையினை அனுப்பி கடாரம், சுமத்திரா, மலாயா அதனைச் சார்ந்த தீவுகளையும் ஒரே நேரத்தில் அடிமைப் படுத்தினான்.

கங்கை கொண்ட சோழபுரத்தில் இராஜேந்திர சோழன் தான் கட்டிய கோவிலருகே புதிய விளைநிலப் பாசனத்திற்காக ஏரி ஒன்றை வெட்டினான்.

அதில் முதலில் விடுவதற்காக கங்கை நீரினைக் கொண்டு வரவேண்டும் என எண்ணி ஆந்திரம், கலிங்கம், வங்கம் ஆகிய நாடுகளின் எதிர்ப்புகளை முறியடித்து கங்கைக்கு மிதிலை வரை சென்றான். முதலாம் இராஜேந்திர சோழனின் ஆக்ரமிப்பு, வங்காளத்தில் சில நிரந்தரமான முத்திரைகளைப் பதித்தது. ராஜேந்திரனின் வம்ச வழி வந்த சமந்தசேனா என்பவனே சேனவம்சம் என்ற ஒரு அரச வம்சம் வங்காளத்தில் உருவாகவும் அப் படையெடுப்பு வழி செய்தது.

சோழர்கள் வடக்கே நெல்லூரிலிருந்து தெற்கே கன்னியாகுமரி அருகிலுள்ள கோட்டாறு என்னும் ஊர் வரை ஒரு நெடுஞ்சாலையை நிறுவினார்கள். போர்ப் படைகள் செல்லுவதற்கும், வணிகத்திற்கும் இது பெருதவியாய் அமைந்தது. வங்கத்தின் கடலோரத் துறைமுகமான தமரலிப்டிக்கும் காவிரிப்பூம்பட்டினத்திற்கும் கடல் வழியாக வணிகம் தழைத்தது. தமிழ் வணிகர்கள் பெருமளவில் அந்த நாடுகளில் சென்று தங்கி வணிகத்தினை வளர்த்தனர்.

பண்டைக் காலத்திலிருந்தே உலகின் பல்வேறு நாடுகளுடன் இந்தியர்கள் குறிப்பாகத் தமிழர்கள் கடல் வாணிகத்தில் மேலோங்கி விளங்கினர் என்பது இதனால் புலனாகிறது.

பாடம்-3

தமிழரும் பிறநாட்டு வணிகமும்

தமிழர்கள் திறமை மிக்க கைவினைஞர்கள். அவர்கள் பொருளாதாரத்தில் எல்லா சுகங்களையும் அனுபவித்தவர்கள். அவர்கள் காட்டுமிராண்டிகளோ நாகரிகமற்றவர்களோ அல்லர். அவர்கள் விவசாயத்தைப் பெருமளவில் நடத்தி வந்தார்கள். அதற்கெனப் பெரிய அணைகளைக் கட்டினார்கள். பாசன ஆறுகளையும், கால்வாய்களையும், ஏரிகளையும் வெட்டினார்கள். கோட்டைகளை உடைய நகர்களை நிர்மாணித்தார்கள். அகன்ற நெடுஞ்சாலைகளை உருவாக்கினார்கள். அவர்கள் விதவிதமான நூதனப் பொருட்களைத் தயாரித்தார்கள். அவர்கள் நீடித்து உழைக்கும் உறுதியான கப்பல்களைக் கட்டினார்கள். அதன் வழியாக அவர்கள் பல நாடுகளுடன் வணித்தினை நடத்தினார்கள். தமிழர்களின் கப்பல்களில் இரும்பு ஆணிகளை உபயோகிக்கவில்லை. அவை காந்தத்தினால் ஈர்க்கப்படும் என்பதாலும் விரைவில் துரு பிடிக்கும் என்பதாலும் அதனைத் தவிர்த்தார்கள். மாறாக மர ஆணிகளையே உபயோகப்படுத்தினர்.

வணிகம் தொடர்பாகப் பல நாட்டு மக்களும் தமிழ்நாட்டை நாடி வந்தார்கள். குறிப்பாக கிரேக்கர்களும் ரோமர்களும் வெள்ளை நிறமுடைய ஐரோப்பியர்களும் அதிக அளவில் வந்தார்கள். வணிகம் மட்டுமல்லாமல் சோழனின் படைகளில் அவர்கள் பங்கேற்றார்கள். புதிய ஆயுதங்களை அறிமுகப்படுத்தினார்கள். போர் எந்திரங்களைச் சோழனின் கப்பல்களில் பொருத்தினார்கள். அத்துடன் சோழ அரசர்களின் தனிப் பாதுகாப்புப் பணியிலும் ஈடுபட்டார்கள். இதனைச் சங்கப் பாடல் சுட்டிக் காட்டுகிறது.

"மெய்ப்பை புக்க, வெருவருந் தோற்றத்து
வலிபுனர் யாக்கை, வன்கண் யவனர்"

என்று நம்பூதனார் எனும் புலவர், பத்துப்பாட்டிலுள்ள முல்லைப் பாட்டில் இவ்விதம் பாடியுள்ளார்.

தமிழகத்தில் யவனர்கள்:

யவனர் போலவே அராபியர்களும் இங்கு வந்து தங்கி வணிகத்தில் ஈடுபட்டதுடன், சோழ அரசர்களின் அந்தப்புரக் காவலர்களாகவும் இருந்துள்ளனர். அவர்கள் செவிடர்களாகவும் ஊமையர்களாகவும் இருந்துள்ளனர். அவர்களைத் தமிழர்கள் மிலேச்சர் என்றே அழைத்தனர். நம்பூதனார் அதுபற்றியும் பாடியுள்ளார்.

"உடம்பின் உரைக்கும், உரையா நாவின்
படம்புகும் மிலேச்சர் உழையாராக"

யவனர்கள் என்றழைக்கப்பட்ட கிரேக்கர்கள் தமிழ்நாட்டில் நல்ல நட்புறவுடன் இருந்த அதே காலத்தில், வட இந்தியாவில் படையெடுத்து வந்து சிந்துவின் ஒரு பகுதியை அடிமைப்படுத்தினார்கள்.

மாவீரன் அலெக்சாந்தர் மிகச் சுலபமாகவே ஆசியா, சிரியா, எகிப்து ஆகிய நாடுகளை வெற்றி கொண்டான். எகிப்தின் நைல் நதி மத்திய தரைக் கடலில் கலக்கும் இடத்தில் தனது பெயராலேயே அலெக்சாந்திரியா என்ற நகரை உருவாக்கினான். அந்நகர் பல நாட்டு மக்களும் வணிகம் தொடர்பாக வந்து கூடும் இடமாக அமைந்தது. இந்தியாவிலிருந்து யோகிகள், இந்திய சநாதன தத்துவார்த்திகள், பௌத்த குருமார்கள், தெற்கிலிருந்து சைவ சித்தாந்திகள் எனப் பலர் அங்கு சென்றனர். அலெக்சாந்தர் அரிஸ்டாட்டிலின் சிஷ்யனாக இருந்த காரணத்தினால் அவனுக்கு இயற்கையாகவே தத்துவார்த்திகள்மீது பரிவு இருந்தது. அதனால் அலெக்சாந்திரியாவில் ஏராளமானவர்கள் கூடினர்.

தென் இந்தியர்கள் அலெக்சாந்திரியாவில் வணிகம் தொடர்பாக ஒரு காலனியை உருவாக்கி வாழ்ந்து வந்தனர். அதனால் புதிய பிளாட்டோனியத் தத்துவங்கள் உருவாகவும் ஆரம்ப கால கிறிஸ்துவர்களிடம் அவற்றின் பிரதிபலிப்பும் இருக்கவே செய்தது. அதன் விளைவாகவே ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் பிற்காலத்தில் தியாசபிகல் சொசைட்டி, பௌத்த சொசைட்டிகள், இராமகிருஷ்ண மிஷன், விவேகானந்தரின் தீவிரப் பிரச்சாரம், ஓஷோவின் புரட்சிகரக் கருத்துகள் மேலை நாடுகளில் வெகு தீவிரமாகப் பரவத்தொடங்கின.

மன அமைதிக்குக் கிழக்கைத் தேடி வரும் உந்துதல் பல நூற்றாண்டுகளாக இருப்பினும், சமீபகாலத்தில் அது தீவிரமடைந்துள்ளது. இதற்கான அடிப்படைத் தொடர்பு ஆரம்பகால கடல்வழி வாணிகமாகவே இருந்தது.

போலினேஷியர்கள் தமிழர்களே:

இந்துமாக் கடலின் கிழக்கிலும் பசிபிக் பெருங்கடலின் தெற்கிலும் மத்தியிலும் உள்ள தீவுகளில் வாழ்பவர்களை போலினேஷியர்கள் என அழைக்கின்றனர். இத் தீவுகளில் வாழும் அவர்கள் தெற்கு ஆசியாவைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவ்வாறு அழைக்கப்படுகிறார்கள். தெற்கு ஆசியா எனக் குறிப்பிடப்படுவது தென் இந்தியத் தமிழர்களைத்தான்.

தென் இந்திய வளைகுடாவில், முத்துக் குளிக்கும் பரவர்கள், மீனவர்கள் ஒரு குழுவாகப் போலினேஷியர்கள் எனப் போனார்கள். இவர்களுட ன் பறையர்களும் இருந்தனர். இவ்விருவரும் குழுவினராக எங்கெல்லாம் முத்து கிடைக்கும் பவளப் பாறைகள் உள்ளனவோ அங்கெல்லாம் சென்றார்கள். தூத்துக்குடி, இலங்கை முதல் அமெரிக்கக் கடற்கரை வரை அவர்கள் பரவி இருந்தார்கள். அமெரிக்காவிலிருந்து மீண்டும் ஒரு குறிப்பிட்ட பிரிவினராக நாகரிக வளர்ச்சி அடைந்தவர்களாக எகிப்தின் பிரமிடுகளின் காலத்தில் சென்றடைந்தனர்.

போலினேஷியர்கள், பெர்சிய வளைகுடாவில் உள்ள போலினேஷியர்களுடன் உருவ அமைப்பில் ஒத்துள்ளனர் என்றாலும், எலியட் ஸ்மித் கூறுவது போல, அவர்கள் போனீஷியன் மற்றும் முத்து சேமிப்போரின் கலப்பு இனமாகவும், ஒரு புதிய நாகரிக மக்களாக இந்தியாவிலிருந்து இந்தோனேஷியா வழியாக பசிபிக் கடல் தீவுகளுக்குச் செல்லும் வழியில், அவர்கள் வழித் தடங்களை விட்டுச் சென்றுள்ளார்கள் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

அச்சம் என்பதையே அறியாத தமிழர்கள் லெமூரியக் கண்டத்தில் நாகரிகத்தில் வளர்ந்தவர்கள்; குமரிக் கண்டத்தில் தமிழ் வளர்த்தவர்கள்; கடல்களின் தாக்கத்தினால் பெரும் நிலப்பரப்புகள் உடைந்து தீவுகளாக ஆகிப்போனதை அவர்கள் அறிவார்கள். அவர்களின் உறவினர்கள் அந்தத் தீவிலேயே தனித்துச் சென்றதையும் கண்டார்கள். அவர்களைத் தேடி ஓடத்தில் 10-20 எனக் குழுக்களாகக் கிளம்பினார்கள். அவர்களுக்கு கடல், குளம் போல் இருந்தது. வானம் வீட்டுக் கூரைபோல் தெரிந்தது. விண்மீன்கள் அவர்களின் தோழனாக வழிகாட்டியாக இருந்தன.

பிராமணர்களின் முன்னோர்கள்:

பரவர் என்னும் மீனவர்கள், வரலாற்று முந்தைய காலம் தொட்டு மீன் பிடிப்பதை ஒரு கலையாகவே கொண்டிருந்தார்கள். நீரில் அச்சமின்றி செல்லும் இயல்பினை அவர்கள் பெற்றிருந்ததால், ஆதி காலத்தில் மிகவும் போற்றத்தக்க வாழ்க்கையினைக் கொண்டிருந்தார்கள்.

"மலபாரில் உள்ள நம்பூதிரிப் பிராமணர்களின் முன்னோர்கள் மீனவ வழிவந்த தாழ்ந்த குல மரபினர்" என டபிள்யூ டபிள்யூ ஹண்டர் என்பவர் கூறுகிறார். இவர்களது திருமணச் சடங்குகளில் முக்கியமான ஒன்று மீன் பிடிக்கும் சடங்கு ஒன்று உண்டு. இது பழைமையின் ஒரு கூறினைப் பாதுகாத்து வைப்பதுபோல் இது தோன்றலாம்' எனக் கூறுகிறார். 'நம்பூதிரிப் பிராமணர்கள் ஐந்தாம் நாள் மணமக்கள் ஒருவருக்கு ஒருவர் எண்ணெய் பூசிவிடுவார்கள். மணமகன், மணமகளுக்குக் கூந்தலை வாரி விடுவான். குளிப்பதற்கு முன்பு அவர்கள் ஒரு

துணியினைப் பயன்படுத்திக் குட்டையில் இருக்கும் மாறட்கலி என்னும் மீனினைப் பிடிப்பார்கள்'. இதுபோலவே தென் கன்னடத்தைச் சேர்ந்த சிவாலிப் பிராமணர்களிடையே மணச் சடங்கின்போது சடங்கில் பயன்படுத்தும் பாயினை ஊர்வலமாகக் குளத்திற்கு எடுத்துச் செல்லும் வழக்கம் உள்ளது. அங்கு மணமக்கள் மீன்பிடிப்பதாகப் பாவனை செய்வதோடு, தங்கள் விரல்களை இணைத்துக் கொண்டு நெற்றியினைத் தொட்டுக் கொள்வர் என 'தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்' 5-ம் தொகுதி கூறுகிறது.

இந்தச் சடங்குகளின் மூலம், இவர்கள் ஒரு காலத்தில் மீனவர்களாக இருந்திருக்க வாய்ப்புண்டு என்பதை உறுதி செய்கின்றது. பிராமணர்களின் முன்னோர்களாக இருந்த ஒரு வகுப்பினர், பின்னர் தாழ்ந்தவர்களாக எப்படி ஆக்கப்பட்டார்கள் என்பது ,வியப்பாகவே உள்ளது.

இப்படிப்பட்ட மக்களே வரலாற்றிற்கு முந்தைய காலத்தில் இடம் விட்டு இடம் பெயர்ந்தார்கள். அவர்களின் வழிபாட்டுத் தெய்வங்கள் அவர்களின் மூதாதையர்களின் ஆவிகளாக இருந்தன. பாட்டனும் முப்பாட்டனும் துணை இருப்பார்கள் என்ற நம்பிக்கை அவர்களை உந்தித் தள்ளியது. சென்ற இடங்களில் தங்களின் முக்கிய உணவாகத் தேங்காய், வாழை ஆகியவற்றை எடுத்துச் சென்று தீவுகளில் பயிரிட்டார்கள். எந்த உணவும் நிலங்களில் இருந்து கிடைக்காதபோது அவர்களின் வழக்கமான உணவான கடல் வாழ் மீனும், இதர கடல் வாழ் விலங்குகளும் இருந்தன. பெரிய அளவிலான திமிங்கலங்களையே வேட்டை ஆடும் அளவிற்கு அவர்களிடம் வீரமும் துணிவும் இருந்தன. பறவைகள் கடலில் தீவுகள் இருக்கும் இடத்தைத் தெரிவித்தன. அத்திசைகளில் சென்று பல தீவுகளை அடைந்தார்கள்.

பசிபிக் கடலில் பல தீவுகள் எரிமலைகளினால் உருவானவையே. அவற்றிலிருந்து நெருப்புக்குழம்பு பீய்ச்சி அடித்ததையும் திகிலுடன் கண்டார்கள். அத் தீயினைத் தாயைப் போலவே வணங்கி நேசித்தார்கள். தீக் குழம்பு வெளிவரவிருப்பதை முன்கூட்டியே அறியும் திறன் பெற்றார்கள். அதிலிருந்து தப்பவும் வழி கண்டார்கள்.

சீறி வரும் புயற் காற்றையும், எழுந்து வரும் அலைகளையும், அவர்கள் அச்சமின்றிக் கடந்தார்கள். துடுப்புகளால் ஓடங்களை அவர்கள் உபயோகித்தாலும், அதில் ஒரு மரமும் அதன் மீது ஒரு துணியினையும் கட்டி, காற்று சாதகமாக வீசும்போது உபயோகிப்பார்கள். அந்த நேரத்தில் துடுப்பு போடாமல் இளைப்பாறுவார்கள். கடலில் துள்ளி விளையாடும் மீன்களைத் தூண்டில் அல்லது வளையம் போன்ற வலையில் பிடிப்பார்கள். ஒரு அகன்ற மண் சட்டியில் நெருப்பு மூட்டி அதில் மீனைச் சுட்டுத் தின்பார்கள்.

கடல் பயணத்தின்போது, கெப்பைக் களியினைச் சமைத்து எடுத்துச் செல்வார்கள்.

அதைச் சுரைக் குடுக்கையில் சமைத்து எடுத்துச் செல்வார்கள். சுரைக் குடுக்கையில் குடிநீரும், கள்ளும் இருக்கும். அவை தீர்ந்தவுடன் பசிக்குத் தேங்காயும், அதன் நீரும் வாழைப் பழமும் இருக்கும். இருபத்தைந்து நாட்களுக்குத் தேவையான உணவுடன் புறப்படுவார்கள். நெருக்கடி வரும்போது, குறைந்த அளவில் பகிர்ந்து உண்ணும் ரேஷன் முறையைப் பின்பற்றுவார்கள். துடுப்புப் போடும்போது வலி தெரியாமலிருக்க அவர்கள் ஏதாவதொரு பாட்டைச் சேர்ந்து பாடியபடியே தள்ளுவார்கள். வறுத்தெடுக்கும் வெயிலும், மை இருட்டும், இருள் சூழ்ந்த கடலில் பெய்யும் பெரும் மழையிலும் குத்து மதிப்பாக ஓடத்தை நகர்த்திச் செல்வார்கள். அளவற்ற நம்பிக்கையும் ஆழ்ந்த தைரியமும் பேராற்றலுடைய உடல் வலிமையும் அவர்களை ஏதாவது ஒரு தீவிலே கொண்டு நிறுத்தவே செய்யும். மனித சஞ்சாரமே இல்லாத அத்தீவுகளில் தங்களின் வாழ்க்கையைத் துவங்குவார்கள்.

உலகின் முதல் கடலோடிகள்:

கண்டங்கள், நிலப்பரப்புகள் உடைந்து சிதறித் தீவுகளாக ஆன அந்த நினைவிற்கு எட்டாத வரலாற்றிற்கு முந்தைய காலங்களிலேயே பல தீவுகளில் சென்று குடி அமர்ந்தவர்கள் தமிழர்களே. அவர்கள் உலகின் முதல் கடலோடிகள்.

பல நூறு ஆயிரம் மைல்கள் தொலைவுடைய தீவுகளில் அவர்கள் தங்களின் வாழ்க்கையை அமைத்துக் கொண்டபோது அவர்களிடையே சில தனித்த கலாசாரமும் மொழிகளில் சில மாறுதல்களும் வெகு இயல்பாகவே ஏற்பட்டன. அவர்கள் தங்கி இருக்கும் நிலத்தின் வளம், நீர், சுற்றுச்சூழல் ஆகியவை அவர்களின் உடல் வளர்ச்சியிலும் நிறங்களிலும் சிறுசிறு மாறுதல்களை ஏற்படுத்தின.

கடந்த இருநூறு ஆண்டுகளுக்கு முன்புவரை அவர்கள் தங்கள் தனித்தன்மையைக் காப்பாற்றியவர்களாகவே இருந்தனர். வெள்ளையர்கள் நாடு பிடிக்கத் துவங்கியபோது, அத்தீவுகளையும் அடிமை கொண்டார்கள். அந்த மக்களை மதம் மாற்றுவதில் தீவிரமாக இருந்தார்கள். பல ஆயிரம் ஆண்டுகளின் பாரம்பரியக் கலாச்சாரத்தில் அதிரடியாகத் தலையிட்டார்கள். இப்போது அம்மக்கள் எந்த மொழியைப் பேசினாலும் எந்த மதத்தைச் சார்ந்திருந்தாலும் அவர்களின் உடலில் ஓடும் இரத்தம் ஆதித் தமிழனுடையதே.

ஜிம்பாப்வேயில் தமிழர்கள்:

தென் ஆப்பிரிக்காவில் டச்சுக்காரர்களுடன் போரிட்டு, அந்த நாட்டில் தாங்களும் நுழைந்து ஆட்சி அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்ட ஆங்கிலேயர்கள் அங்கே அடிமை வேலைக்கு இந்தியாவிலிருந்து மக்களைக்கொண்டு சென்றனர். அதில்

பெரும்பான்மையினர் குஜராத்தியர்களும் தமிழர்களுமே ஆவர். இவர்கள் தென் ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியில் கரும்புத் தோட்டங்களில் வேலைக்கு அமர்ந்தனர். எந்த இடத்திலிருந்து ஆதியில் மனிதன் புறப்பட்டு குமரிக்கண்டம் வந்து தமிழையும் தமிழ் நாகரிகத்தையும் வளர்த்தானோ, அதே இடத்திற்கு வெகுகாலம் கழித்து அடிமையாய்ப் போனதும் வரலாறாக ஆனது.

ஆனால் தமிழர்கள், தென் ஆப்பிரிக்காவின் வடக்கில் உள்ள ஜிம்பாப்வே என்ற நாட்டிற்கும் சென்றார்கள். அடிமைகளாக அல்ல. என்ஜினியர்களாக, சிற்பிகளாகச் சென்றனர். அது ஒரு சுவையான வரலாறு. அவ்வரலாற்றை சிதறிக் கிடந்த குப்பைகளில் இருந்து பொறுக்கிச் சேர்க்க வேண்டியதாயிற்று.

தென் ஆப்பிரிக்காவில் முதலில் குடியேறியவர்கள் டச்சுக்காரர்கள். அவர்கள் தாய்நாட்டின் தொடர்பை முறித்துக்கொண்டு, கொச்சையான டச்சு மொழியை ஆப்பிரிக்க மொழி எனக் கூறினர். தங்களைப் போயர்கள் எனவும் அழைத்து வந்தனர். இடையே ஆங்கிலேயர் புகுந்து குட்டையைக் குழப்பி போயர்களுடன் சண்டையிட்டனர். இந்த யுத்தத்தில் காந்தியடிகள் கூட மருத்துவ முகாம்கள் நடத்தியது ஒரு வரலாறு. ஆங்கிலேயர்கள் ஆப்பிரிக்க வைரச் சுரங்கங்களை தங்களுடையதாக ஆக்கிக்கொண்டு பெருஞ்செல்வம் ஈட்டினார்கள். அச்சுரங்க முதலாளிகளில் பெரும் பணக்காரனாக இருந்தவன் 'செசில் ரோடஸ்' என்பவன். 'டி பேர்ஸ்' வைரக்கடையின் ஆரம்ப முதலாளியும் அவனே.

இந்த ரோடஸ் என்பவன் வெள்ளைக் கூலிப் படைகளின் உதவியோடும், துப்பாக்கிகளோடும், வெறும் வேல், கம்பு ஆயுதங்களை மட்டுமே வைத்திருந்த கறுப்பு மக்களை வென்று ஒரு பெரும் நிலப்பரப்பை தனதாக்கிக் கொண்டான். அதனை ஆங்கிலேய அரசுக்குப் பரிசாகவும் தந்தான். அந்நாட்டிற்கு அவனது பெயராலேயே ரொடீஷியா எனப் பெயரும் வந்தது. 1980களில் அந்நாடு சுதந்திரம் பெற்ற பிறகு ஜிம்பாப்வே ஆனது.

1750 களில் கறுப்பர்களின் வசம் இருந்தபோது அந்த இடம் அடர்த்தியான காடாகவும் வன விலங்குகள் நிறைந்த இடமாகவும் இருந்தது. தென் ஆப்பிரிக்காவிலிருந்து வெள்ளைய வேட்டைக்காரர்கள் உள்ளே சென்றபோது, அங்கே கருங்கல்லினால் அடுக்கிக் கட்டப்பட்ட ஒரு கோட்டையினைக் கண்டார்கள். அதற்கு அருகில் ஒரு வட்டமான மதில் கோட்டையையும் கண்டார்கள். அதற்கு அருகில் ஒரு வட்டமாக மதில் சுவருடன் கூடிய ஒரு 40 அடி சுற்றளவே உள்ள ஒரு இடத்தையும் பார்த்தார்கள். அதற்கு இரண்டு அடி வாசல் ஒன்றிருந்தது. அந்த வட்ட வடிவ சுற்றுச் சுவருக்குள்ளாக ஐந்து அடி குறுக்காக உள்ள பதினைந்து அடி உயரம் கொண்ட ஒரு திடமான கருங்கல் கூம்பு ஒன்றும் இருந்தது. அது பின்னாட்களில் வழிபாட்டுக்குரிய லிங்கமாக இருக்கலாம் என்று சிலர் கூறினர்.

ஒரு அரேபிய வியாபாரி ஜான்சிபாரிலிருந்து தங்கத்தைத் தனது கப்பல்களில் கொண்டு வந்தபோது அது எங்கு கிடைக்கிறது என்ற முயற்சியில் இறங்கினான். அது கடற்கரைக்கு அப்பால் 300 மைல் தொலைவில் ஜிம்பாப்வேயில் உள்ளத் தங்கச் சுரங்கங்களிலிருந்து எடுக்கப்படுவதாக அறியப்பட்டது. அதனைத் தேடி வெள்ளையர்கள் சென்றபோது அங்கு ஒரு தங்கச் சுரங்கமும் காணப்படவில்லை. அவர்கள் இதனைத் தேடி அலைவதற்கு ஒரு 500 ஆண்டுகளுக்கு முன்பாக அங்கு வாழ்ந்த கறுப்பு மக்கள் அந்த இடத்தைக் காலி செய்துவிட்டுப் போய்விட்டனர்.

1867ம் ஆண்டில் 'ஆதம் ரெண்டர்ஸ்' என்ற தென் ஆப்பிரிக்கரும் 'கார்ல் மௌச்' என்ற ஜெர்மனியரும் தேடுதல் வேட்டையில் இறங்கினார்கள். அவர்கள் அந்தக் கோட்டையை அடர்ந்த காடுகளுக்கிடையில் கண்டுபிடித்து அதற்கு சபோலா எனப் பெயரிட்டனர். அந்த இடம்தான் தங்கச் சுரங்கங்களுக்கான இடம் என எண்ணினர். ஆனால் சபோலா என்பது மொசாம்பிற்கு வடக்கே ஒரு சிறு துறைமுகமாக இருந்ததை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

1891-ல் 'தியோடார்பெண்ட்' என்பவர் வட்டவடிவமான சுற்றுச் சுவற்றிற்குள் உள்ள அந்தக் கூம்பு, லிங்க வழிபாட்டிற்கான உருவம் எனக் கூறினார். ஆங்கிலேய அகழ் ஆய்வாளர் ரோஜர் சம்மர்ஸ் அங்குள்ள தங்கச் சுரங்கங்கள், தென் இந்தியாவில் உள்ள கோலார் தங்கச் சுரங்கங்களின் தொழில் நுட்பம் எனக் கூறினார்.

மாக்கல்லினால் செதுக்கப்பட்ட எட்டு கருடன்களின் சிலைகள் அங்கு கிடைத்தன. இவற்றில் ஏழு கோட்டைக்கு உள்ளாகவும், ஒன்று வெளியிலுமாக இருந்தன. அக்கருடன் சின்னமே தற்போதைய ஜிம்பாப்வேயின் தேசிய சின்னமாக உள்ளது. அங்கிருந்த மக்கள் தங்களுக்கு அப் பறவைகள் சக்தி அளிக்கக் கூடியவை என் நம்பி இருப்பார்கள் என்று தெரிகிறது.

1500 வருடங்களுக்கு முன்பாக, கி.பி. 500 களில் தமிழக கடல்வழி வணிகம் மேற்கில் செங்கடலிலும், பெரினிக்கி துறைமுகத்திலும் பெருமளவில் நடைபெற்று வந்தது. அரேபிய வணிகர்கள் ஆப்பிரிக்காவின் கீழ்க்கரையோரமாகத் தங்களது தோணி போன்ற உருவமுடைய கப்பல்களைச் செலுத்தி ஜான்சிபார், சபோலா ஆகிய இடங்களில் வணிகக் கிடங்குகள் நிறுவி, பாசிமணி, கண்ணாடிப் பொருட்களைக் கொடுத்துவிட்டு, விலை உயர்ந்த காண்டாமிருகக் கொம்புகளையும், யானைத் தந்தங்களையும் ஆப்பிரிக்கக் கறுப்பர்களிடமிருந்து மலிவாக வாங்கிச் சென்றனர். காண்டாமிருகக் கொம்பு இளமையும், தெம்பும் தரும் என்ற நம்பிக்கையில் சீன மக்கள் அதிக விலை கொடுத்து அதனை அரேபியர்களிடமிருந்து வாங்கினர்.

முதலாவதாகத் தங்கச் சுரங்கங்கள் அமைப்பது பற்றிய தொழில் நுட்பத்தை கறுப்பர்களுக்குத் தமிழர்கள் கற்றுக் கொடுத்திருக்கின்றனர். பாலைவனங்களின் அருகே சுற்றித் திரிந்த பழங்குடி மக்களான சான்ஸ் என்பவர்களை அச்சுரங்கங்களின் உள்ளே அனுப்பி தங்கத்தை வெட்டி எடுத்திருக்கிறார்கள்.

இரண்டாவதாக அந்தக் கறுப்பு மக்களுக்குச் சிற்ப வேலை தெரியாது. கோட்டைச் சுவர்கள், கருங்கல்லை சம்மட்டியினால் அடித்து சதுரமாக உடைத்து அதனையே ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி அவர்கள் எழுப்பி இருந்தார்கள். உளி கொண்டு செதுக்கத் தெரியாத மக்கள், சுரங்கங்களை நிர்வகிக்கச் சென்ற தமிழ் மக்கள் தங்களுடன் சில சிற்பிகளையும் கொண்டு சென்று அந்தக் கருடன்களை மரக்கல்லில் செதுக்கி இருக்கிறார்கள். அந்த எட்டு சிலைகளும் ஏறக்குறைய ஒன்று போலவே தோற்றம் உடையவை. அக் கருடன்கள் தமிழகக் கோயிலகளில் உள்ள கருடன்களையும் ஒத்திருக்கின்றன. கருட ஆழ்வாரை அல்ல.

ஆவிகளை மட்டுமே வழிபட்டு வந்த அந்த மக்களுக்கு லிங்க வழிபாட்டு முறையைச் சொல்லித் தந்திருக்க வேண்டும். அதனாலேயே அவர்கள் தங்களின் வழக்கமான பாறைக் கற்களையே அடுக்கி ஒரு பிரம்மாண்டமான லிங்கத்தைச் செய்து வழிபட்டிருக்கிறார்கள். லிங்க வழிபாட்டு முறை தமிழ்நாட்டிலும், சிந்து வெளியிலும் 5000 ஆண்டுகளுக்கு முன்பாகவே உள்ளதாகத் தெரிகிறது.

கடல் வணிகத்தில் தொடங்கி, கடல் தாண்டித் தமிழன் சென்று குடியமர்ந்து வாழத் தொடங்கினர். வணிகமும் வாழ்வும் கடல் தாண்டியவைகளாகவே உள்ளமையால் இரண்டும் ஒன்றாக உள்ளது. 'நிரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற பழமொழி தமிழன் வாழ்வில் ஒரு அம்சமாகவே நிறைந்திருந்தது.

உலக வரலாறுகள் நமக்குக் கற்பித்த பாடம் வணிகர்கள் ஆளுபவர்களாகவும் இருந்துள்ளனர். கடலோடிகளான மீனவர்களும் பறையர்களும் ஆண்ட மக்களாக இருந்துள்ளனர். அவ் வரலாறுகளைப் படிக்கும்போதும், அவற்றில் கிடைக்கும் செய்திகளை அறியும்போதும், தமிழர்கள் எவ்வளவு மேன்மையுடைய மக்களாக இருந்துள்ளார்கள் என்பதும், அவர்களை முன்பின் அறிந்திராத நாடுகள் ஈர்த்தன என்பதும் வியப்பூட்டுபவையாக இருக்கின்றன.

திரைகடல் ஓடிய பெரும் வணிகர்கள் இன்று உள்நாட்டிலேயே வணிகம் மட்டுமல்லாமல் தொழில் விருத்தியிலும் கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டனர். ஆயிரக்கணக்கான வணிக, போர்க் கப்பல்களை வழிநடத்திய தமிழன் இறுதியாக வெள்ளையனின் அலங்கோல ஆட்சியில் கப்பலோட்டிய தமிழனை செக்கிழுக்க வைத்தது கண்ணில் விரிகிறது.

மூவாயிரம் ஆண்டுகள், உலகில் எந்த நாடும் செய்தறியாத ஒரு தொடர்ந்த கடல்வழி வணிகம் செய்த பெருமை தமிழனுக்கு மட்டுமே உண்டு. எழுத்தில் பதிவாகாமல் அதற்கு முன்பும் வணிகம் நடந்திருக்கும். அதற்கான சான்றுகள் கிடைக்காததால் அவை பற்றி அறிய முடியவில்லை. செல்வமும் தங்கமும் கொழிக்க வைத்த வணிகக் கொடிகளும் கப்பலின் கொடிகளும் காற்றில் விரிந்த கப்பலின் பாய்களுடன் நம் கண்முன்னே வருகின்றன.



கேள்விகள்

1. மூவாயிரம் ஆண்டுக் கால கடல்வழி வணிக வரலாற்றை விவரிக்க.
2. தமிழகக் கடலோடிகளின் தோற்றத்தை விளக்குக.
3. கடல்வழி வாணிபத்தில் தொன்மையான துறைமுகங்களின் பங்கைத் தெளிவு படுத்துக.
4. தமிழர்களின் கடல்வழி வாணிபம் குறித்து ஒரு கட்டுரை வரைக.
5. தமிழர்களின் பல்வேறு நாடுகளுடனான வாணிபம் குறித்து விவரிக்க.
6. சோழர்களின் கடல்வழி வாணிபம் குறித்து விளக்குக.
7. சாலமனுடனான தமிழர்களின் வாணிகத் தொடர்பு குறித்து விவரிக்க.
8. சீனத்துடனான தமிழரின் வாணிகமும் வாழ்வும் குறித்து ஒரு கட்டுரை வரைக.
9. யவனர்கள் மற்றும் போலினேஷியர்கள் என்போர் யாவர்? அவர்களுடனான தமிழர்களின் தொடர்பை விவரிக்க.
10. ஜிம்பாப்வே நாட்டிற்கும் தமிழர்களுக்கும் உள்ள வணிகத் தொடர்பை விவரிக்கவும்.
11. தமிழகத்திலிருந்து ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட வணிகப் பொருட்கள் எவை எவை என்பதைத் தொகுத்துரைக்க.